பக்கங்கள்: இருப்பத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 09 திங்கட்கிழமை (21.02.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 087



02

இலங்கை அணி அடித்து நொறுக்கியது கனடாவை



04

நியூஸின் வேகத்தில் சரிந்தது கென்யா



09

கச்சதீவு குறித்து மறுஆய்வு செய்ய வேண்டும்



23

பார்வதியம்மாவுக்கு இரங்கல் செய்தி

# குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் இடைநிறுத்தப்பட்டதாக அறிவிப்பு

## மனுக்கள் தாக்கலானதன் எதிரொலி

கொழும்பு, பெப்ரவரி 21

**யாழ். தேர்தல் மாவட்டத்தில் 19 உள்ளூராட்சிச்சபைகள் உட்பட நாடுமுழுவதும் உள்ள 60 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் அறிவித்தபடி மார்ச் 17ஆம் திகதி இடம்பெற மாட்டா எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்தார்.**

அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் தமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப் பட்டமைக்கு எதிராக நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன.

இதன் அடிப்படையில் 60 உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தேர்தல்கள் நடைபெறமாட்டா. இதேவேளை, மூன்று பிரதேச சபைகளுக்கான தேர்தலை நடத்த நீதிமன்றம் ஏற்கனவே தடை விதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையில், கொழும்பு மாவட்டத்தின் மஹரகம, கெஸ்பேவ, கடுவலை உள்ளூராட்சிச் சபைகள், -ஹோமாகம உள்ளூராட்சிச் சபை, கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த கம்பஹா, மினுவாங்கொட உள்ளூராட்சிச் சபைகள் மற்றும் அத்தனகல்லை, களுத்துறை - அகலவத்தை பிரதேச சபைத் தேர்தல்களும் உள்ளடங்குகின்றன.

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 3 உள்ளூராட்சிச் சபைகள், மாத்தளை மாவட்டத்தை சேர்ந்த 2 உள்ளூராட்சிச் சபைகள் மற்றும் நுவரெலிய மாவட்டத்தைச் சேர்ந்த லிந்துலை- தலவாக்கலை நகர சபைத் தேர்தல்களும் இடைநிறுத்தப் பட்டுள்ளன.

தேர்தல்கள் தொடர்பாக மேலும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் விவரம் தருகையில், காலி மாவட்டத்தைச் சேர்ந்த 3 உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள், மாத்தறை அக்குரஸ்ஸ பிரதேச சபையுடன் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 16 சபைகளுக்கான தேர்தலும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 3 உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

திருகோணமலை மற்றும் குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்த முறையே 6 உள்ளூராட்சிச் சபைகளுக்கும், புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 4 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, அநுராதபுரம், பொலனறுவை மாவட்டங்களைச் சேர்ந்த 6 உள்ளூராட்சிச் சபைகளுக்கும்

(21ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டை முன்வைக்க சர்வதேச ரீதியில் முயற்சி

### சீறுகிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, பெப். 21

சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அரசு யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டது என்ற பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இராணுவ ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் புலிகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்து வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்த சில சக்திகள் முனைப்பு காட்டி வருகின்றன எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழில்சார் நிபுணர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் அரசால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது தொழில்சார் நிபுணர்களின் முக்கிய கடமையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க முடியாது என்ற வலுவான நிலைப்பாட்டை படையினர் தகர்த்தெறிந்தனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து விட்டது. இனி நாட்டில் பிரச்சினை இல்லை என எவரும் நினைத்துவிடக் கூடாது என

(21ஆம் பக்கம் பார்க்க)

## தீருவிலில் மக்கள் அஞ்சலி நாளை இறுதிக் கிரியைகள்

தீருவில், பெப்.21

நேற்று இயற்கை எய்திய பார்வதியம்மாளின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளன.

தீருவில் சதுக்கத்தில் நேற்றுமாலை 5 மணி முதல் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அங்கு ஊர்மக்கள் தொடர்ச்சியாக வந்து அஞ்சலி செலுத்தினர்.

இன்று மாலை 5மணி வரை தீருவிலில் அன்னை பார்வதியம்மாளின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்படும்- பின்னர் வல்வெட்டித்துறையில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நாளை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் இடம்பெற்று மாலை 4 மணிக்கு தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

(21ஆம் பக்கம் பார்க்க)

## இறுதி நிகழ்வில் பங்குபற்ற வருகிறார் திருமாவளவன்



கொழும்பு, பெப். 21

பார்வதி அம்மாளின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் இலங்கை வருகிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

திருமாவளவன் ஏற்கனவே ஒரு தடவை வல்வெட்டித்துறைக்கு வருகை தந்து பார்வதி அம்மாளைச் சந்தித்து அவரது நலன் குறித்து விவரமறிந்து சென்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் வல்வையில் நேற்று இயற்கை எய்தினார்

வடமராட்சி, பெப். 21

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் நேற்றுக்காலை 6.10 மணியளவில் இயற்கை எய்தினார்.

வல்வெட்டித் துறையில் சுகவீனமுற்ற நிலையில் வல்வெட்டித் துறை அரசினர் வைத்திய சாலையில் கடந்த சில மாதங்களாகச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் அங்கு இயற்கை எய்தினார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்டப் போரில் சிக்கிய பார்வதியம்மாள் அவரது கணவர் திருவேங்கடம் வேலுப்பிள்ளையுடன் இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு சென்றிருந்தார்.

அங்கிருந்து அவர்கள் பனாகொடை இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அங்கிருந்தபோது பார்வதியம்மாளின் கணவர் உயிர் நீத்தார்.

அதன்பின்னர் பார்வதியம்மாளுக்கு ஏற்பட்ட நோய்க்கு சிகிச்சை அளிக்க தமிழகத்துக்கு அழைத்துச் செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

முதலில் மறுத்துவந்த இந்திய அரசு இறுதியில் அனுமதி வழங்கிய போதும், பார்வதியம்மாளின் உடல் நிலை காரணமாக இந்தியாவுக்கு அழைத்துச் செல்லாமல் அவருக்கு வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுக் காலை 6.10 மணிக்கு பார்வதியம்மாள் இறைபதம் அடைந்தார்.

(ஒ-ஐ-236-319-86)

## இந்திய - இலங்கை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பு

கொழும்பு, பெப். 21

மீனவர் பிரச்சினைக்கு இலங்கை - இந்திய மீனவர் சங்கங்களை சந்திக்கச் செய்து நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகிறார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த சில தினங்களாக யாழ். குடாநாட்டிலுள்ள மீனவர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.


(21ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
21 பெப்ரவரி 2011 திங்கட்கிழமை

# ஈவு இரக்கமற்ற இலங்கை அணி அடித்து நொருக்கியது கனடாவை

- ஆனந்த் -

சர்வதேச நிலையில் தனது இருப்பை நிலைப்படுத்தி விட வேண்டும் என்று துடிக்கிறது கனடா. அந்தக் கனவுகளுக்கு நேற்று மிக மோசமான ஒரு நாள். கனடாவைத் தலையெடுக்க விடாமல் ஏறி இருந்து அடித்து நொருக்குவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றன கிரிக்கெட் ஜாம்பவான் நாடுகள். கனடாவின் தலையில் 210 ஓட்டங்கள் மேலதிகம் என்ற வெற்றியைப் பதித்தது இலங்கை.



தனது கிரிக்கெட் வாழ்க்கையில் அதி வேகமான சதத்தை நேற்றுப் பூர்த்தி செய்த மஹேல ஜெவர்த்தன, தலைவர் குமார் சங்கக்காரவுடன் சேர்ந்து முதல் விக்கெட்டுக்கு 176 ஓட்டங்களைப் பகிர்ந்தார். பின்னர் இலங்கைப் பந்து வீச்சாளர்கள் அதிர்ஷ்டமற்ற கனேடிய துடுப்பாட்ட வரிசையை துவம்சம் செய்து உறுதியான வெற்றியைப் பதிவு செய்தனர்.

ஆரம்பத் துடுப்பாளர்களான உபுல் தரங்கவும் திலகரட்னே தில்ஷானும் 63 ஓட்டங்களைப் பகிர, நான்காவது ஆளாகக் களம் வந்த ஜெவர்த்தன 80 பந்துகளில் சரியாக 100 ஓட்டங்களை விளாசினார். 81ஆவது பந்தில் 'அவுட்'டானார். ஒன்பது பவுன்டரிகளும் ஒரு சிக்ஸரும் அடங்கலாக அவர் சதத்தை எட்டினார்.

'சைட் ஸ்கிரீன்' கோளாறு மற்றும் காயம் போன்ற பிரச்சினைகளால் விருந்தினர்கள் களத் தடுப்பை முடிக்க நான்கு மணி நேரத்தை எடுத்துக் கொண்டனர். 59 பந்துகளில் தில்ஷான் அரைச் சதம் பெற்ற போதும் முதல் 20 ஓவர்களும் இலங்கையின் ஓட்ட வீதம் மந்தமாகவே இருந்தது. பந்துகளின் வேகத்தைக் குறைத்த ஆடுகளம், களத்தப்பில் தேவையான மாற்றங்கள் என்று, அதுவரைக்கும் கிரிக்கெட்டின் பால பாடங்களை கனடா ஒழுங்காகவே ஒப்பித்தது.

ஜெயவர்த்தனா உள்ளே வந்த பின்னரே இலங்கையின் ஓட்ட வேகம் எகிற ஆரம்பித்தது. அவர் ஆட்டத்தை முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இடைவெளிகளை நன்கு பயன்படுத்தியும் அவ்வப்போது எல்லைக் கயிற்றைக் கொஞ்சிக் கொஞ்சியும் சுழல் பந்து வீச்சாளர்களை அச்சுறுத்தினார். மறு முனையில் சங்கக்கார அவசரப் படவே இல்லை. முதல் பவுன்டரியை எட்ட அவருக்கு 47 பந்துகள் தேவைப்பட்டன. அதற்கிடையில் அவருக்கு இரண்டு அபாய மணிகள் அடிக்கப்பட்டன. 12 ஓட்டங்களிலும் 48 ஓட்டங்களிலும் அவர் கொடுத்த இரு பிடிகள் நழுவ விடப்பட்டன. நிதீஸ் குமார் முதலிலும் பாலாஜி ராவோ பின்னரும் பிடிகளை நழுவ விட்டனர்.



ஜெவர்தனவும் இரு தடவைகள் அரும்பொட்டில் தப்பினார். கனேடியத் தலைவர் ஆஷிஸ் பாகி அவர் 'அவுட்' என்று கோரியதை அடுத்து மூன்றாவது நடுவரின் பரிசீலனைக்கு விடப்பட்டத்தில் அவர் தப்பினார்.

இந்த ஜோடியின் உறுதியான தாக்குதலைத் தடுப்பதற்கு கனடாவிடம் தெளிவான நுட்பங்கள், தந்திரங்கள் ஏதும் இருக்கவில்லை. சங்கக்கார 8 ஓட்டங்களால் தனது சதத்தைத் தவற விட்டார்.

2008ஆம் ஆண்டில் இருந்து 60 ஆட்டங்களில் அவர் சதம் எதனையும் பெறாமலேயே உள்ளார். ஆனால் இந்தக் காலப்பகுதியில் அவர் நிறையவே ஓட்டங்களைக் குவித்துள்ளார். சதத்தை எட்ட நேற்றைய நாள் நல்லதொரு சந்தர்ப்பம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் மீண்டும் ஒரு முறை ஏமாற்றினார் அவர்.

அந்தச் சமயத்தில் ஜெயவர்தனவுக்கு இருந்த ஒரேயொரு பிரச்சினை வெக்கையும் சதத்தை எட்டுவதற்காக அவர் பெற வேண்டி இருந்த ஒரேயொரு ஓட்டமும் மட்டுமே.

பதிலுக்குக் களம் இறங்கிய கனடாவிடம் சத்தே இருக்கவில்லை. புதுப் பந்துகளை எதிர்கொண்டு விளையாடுவதற்கு அவர்கள் திணறினார்கள். முன்வரிசைத் துடுப்பாளர்கள் இலங்கையின் வேகத்தில் துவண்டார்கள். திஸ்லன் பெரேரா தனது திறமையை நிரூபித்து, கனேடிய ஆரம்பத் துடுப்பாளர்களான ஜோன் டேவிஸன், சுபின் சுகாரி ஆகியோரை விரைவில் வெளியேற்றினார். ஸனாரே பாகேயைப் பின்னர் புடுங்கினார்.

மழை வரும் என்று பயமுறுத்திக் கொண்டிருந்ததால், முதல் 20 ஓவர்களையும் தனது வேகப் பந்து வீச்சாளர்களைக் கொண்டே வீசுவதில் சங்கக்கார கவனமாக இருந்தார். கனடா தனது 19 வயது இளையோர் அணியில் இருந்து வந்தவர்களை அதிகம் நம்பி இருந்தது. ஆனால் அவர்கள் சோபிக்கத் தவறினார்கள்.

ஜெவர்த்தனா தனது 13ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தது தவிர நேற்றைய ஆட்டம் சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை.



உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011

## 2011 ஆம் உலகக் கிண்ணப் மூன்றாவது போட்டி

ஆட்டம்: இலங்கை Vs கனடா
முடிவு: இலங்கை 210 ஓட்டங்களால் வெற்றி
நாணயச் சுழற்சி: இலங்கை
ஆட்டநாயகன்: மஹேல ஜெயவர்த்தன

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| தரங்க | Runout (குலசேகர, பாலாஜி) | 19 | 31 | 1 | 0 |
| டில்ஷான் | c டேவிசன் b றிஸ்வான்ஷீமா | 50 | 59 | 8 | 0 |
| சங்கக்கார | c & b டேவிசன் | 92 | 87 | 7 | 1 |
| ஜெயவர்த்தனா | c பாலாஜி b டேவிசன் | 100 | 81 | 9 | 1 |
| பெரேரா | Runout (சுக்காரி, பாலாஜி) | 11 | 11 | 1 | 0 |
| மத்தியூஸ் | c & b பெயிட்வன் | 21 | 16 | 3 | 0 |
| கப்புக்கெதர | c குமார் b பெயிட்வன் | 02 | 03 | 0 | 0 |
| சதரவீர | ஆட்டமிழக்கவில்லை | 18 | 10 | 3 | 0 |
| குலசேகர | ஆட்டமிழக்கவில்லை | 07 | 03 | 1 | 0 |
| முரளிதரன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மென்டிஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (lb 13, w 8, nb 1) | 12 | | | |

TOTAL - 332/7 (50)

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஷொக்கன் | 08 | 62 | 0 | 0 |
| ஓஸைன்ட் | 2.1 | 10 | 0 | 0 |
| பெயிட்வன் | 8.5 | 59 | 2 | 0 |
| ஹன்சரா | 9 | 47 | 0 | 0 |
| றிஸ்வான்ஷீமா | 7 | 47 | 1 | 0 |
| பாலாஜி | 7 | 48 | 0 | 0 |
| டேவிஸன் | 8 | 56 | 2 | 0 |

விக்கெட் இழப்பு: 1-63 (தரங்க), 2-88 (டில்ஷான்), 3-267 (சங்கக்கார), 4-276 (ஜெயவர்த்தனா), 5-284 (பெரேரா), 6-295 (கப்புக்கெதர), 7-314 (மத்தியூஸ்)

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| குணசேகர | c டில்ஷான் b குலசேகர | 1 | 10 | 0 | 0 |
| டேவிஸன் | b பெரேரா | 0 | 1 | 0 | 0 |
| சுர்காரி | LBW b பெரேரா | 6 | 10 | 0 | 0 |
| ஹன்சரா | St சங்கக்கார b சமரவீர | 9 | 49 | 0 | 0 |
| பகாஜி | c சங்கக்கார b பெரேரா | 22 | 47 | 2 | 0 |
| றிஸ்வான்ஷிமா | c ஜெயவர்த்தனா b முரளிதரன் | 37 | 35 | 4 | 2 |
| கோர்டன் | c சங்கக்கார b குலசேகர | 4 | 10 | 0 | 0 |
| ஷொக்கன் | c சங்கக்கார b குலசேகர | 4 | 8 | 1 | 0 |
| பெயிட்வன் | ஆட்டமிழக்கவில்லை | 16 | 35 | 1 | 0 |
| பாலாஜி | c தரங்க b முரளிதரன் | 6 | 7 | 1 | 0 |
| ஓஸைன்ட் | b மென்டிஸ் | 4 | 10 | 0 | 0 |
| உதிரிகள் | (lb 8, w 4, nb 1) | 13 | | | |

TOTAL - 122/10 (36.5)

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| குலசேகர | 6 | 16 | 3 | 2 |
| பெரேரா | 7 | 24 | 3 | 0 |
| மென்டிஸ் | 7.5 | 18 | 1 | 3 |
| முரளிதரன் | 9 | 38 | 2 | 0 |
| டில்ஷான் | 5 | 14 | 0 | 0 |
| சமரவீர | 2 | 4 | 0 | 1 |

விக்கெட் இழப்பு: 1-0 (டேவிசன்), 2-8 (குணசேகர), 3-12 (சுர்காரி), 4-42 (ஹன்சரா), 5-53 (பகாஜி), 6-68 (கோர்டன்), 7-74 (ஷொக்கர்), 8-103 (றிஸ்வான்ஷீமா), 9-111 (பாலாஜி), 10-122 (ஓஸைன்ட்).


c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

# சின்னதாய் சில துளிகள்..

✱ ஆஸ்திரேலியாவின் காலம் முடிந்து விட்டது. தரவரிசையில் ஆஸ்திரேலிய அணி மிகைப்படுத்தியே தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது. இந்தமுறை உலகக் கிண்ணத்தைத் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் ஒன்றே கிண்ணத்தைக் கைப்பற்றும். ஆஸியின் ஆதிக்கம் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டது.

- சொன்னவர் இந்திய முன்னாள் அணித்தலைவர் கங்குலி.

## Picture of the day




தாராளம்: இந்திய அணிக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக தன் முதுகையே வாரி வழங்கியுள்ளார், இந்திய பொலிவூட் நடிகை மனிக்சிங்

✱ பங்களாதேஷ் அணிக்கு எதிராக 175 ஓட்டங்களை விளாசியதன் மூலம், 10ஆவது உலகக் கிண்ணத் தொடரில் முதலாவது சதம் அடித்த வீரர் என்ற பெருமையை ஷேவாக் தட்டிச்சென்றுள்ளார்.

✱ ஒரு நாள் போட்டி ஒன்றில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக அதிக ஓட்டங்களைக் குவித்த இந்திய வீரர் என்ற சிறப்பும் அவருக்குக் கிடைத்துள்ளது. இதற்கு முன்பு செளரவ் கங்குலி 2000ஆம் ஆண்டு டாக்காவில் நடந்த ஆட்டத்தில் 135 ஓட்டங்கள் பெற்றிருந்ததே அதிக பட்சமாக இருந்தது.

✱ உலகக் கிண்ண வரலாற்றில் தொடக்க நாள் ஆட்டத்தில் அதிக ஓட்டங்களைச் சேர்த்தவர் என்ற சிறப்பும் ஷேவாக்கை அடைந்துள்ளது. இதற்கு முன்பு நியூஸிலாந்தின் கிளைன் டர்னர் 1975ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரின் தொடக்க நாளில் கிழக்கு ஆபிரிக்காவுக்கு எதிராக 171 ஓட்டங்களைச் சேர்த்திருந்ததே அதிகமாக இருந்தது.

✱ 32 வயதான ஷேவாக்குக்கு ஒரு நாள் போட்டியில் இதுதான் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும். இலங்கைக்கு எதிராக 146 ஓட்டங்களைச் சேர்த்ததே இதற்கு முன்பு அதிகபட்சமாக இருந்தது.

✱ உலகக் கிண்ணத் தொடரில் ஷேவாக் பதிவுசெய்த 2 ஆவது சதம் இதுவாகும்.

✱ உலகக் கிண்ணப் போட்டி ஒன்றில் அதிக ஓட்டங்களைச் சேர்த்தவர்கள் பட்டியலில் ஷேவாக், கபில்தேவின் 175 ஓட்டங்கள் சாதனையைச் சமன் செய்து, நான்காவது இடத்தைப் பெற்றுள்ளார்.

✱ ஒருநாள் கிக்கெட் போட்டியில் டெண்டுல்கர் 'ரன்-அவுட்' ஆனது இது 33ஆவது முறையாகும். அதிக தடவைகள் 'ரன்-அவுட்' ஆன இந்திய வீரர்களில் டிராவிட்டுக்கு (39 முறைகள்) அடுத்த இடத்தில் டெண்டுல்கர் உள்ளார்.

✱ டெண்டுல்கருக்கு இது 445ஆவது ஒரு நாள் போட்டியாகும். இதன்மூலம் அதிக ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றவர் என்ற சாதனையைப் படைத்தார். இந்த சாதனையை இதுவரை அவருடன் பகிர்ந்து கொண்டிருந்த இலங்கை வீரர் ஜெயசூர்யா (444) இந்த உலகக் கிண்ணத் தொடரில் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

✱ டெண்டுல்கருக்கு இது 6ஆவது உலகக் கிண்ணப் போட்டியாகும். பாகிஸ்தானின் மியாண்டாட்டுக்குப் பின்னர் 6 உலகக் கிண்ணத் தொடரில் கலந்து கொண்ட ஒரே வீரர் டெண்டுல்கர்தான்.

## நாளைய ஆட்டம்

நாக்பூர், பி.ப. 2.30

நெதர்லாந்து–இங்கிலாந்து






## உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011

**தினமொரு பரிசுப் போட்டி**

இங்கிலாந்து - நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான நாளைய (22.02.2011) ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

..........................................

பெயர் : ..........................................

தே.அ.இல. : ..........................................

முகவரி : ..........................................

..........................................

இந்தக் கேள்விக்கான விடையை இந்த கூப்பனில் எழுதி நாளை (22.02.2011) நண்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.

கேற்வே வழங்கும் தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியான கூப்பன்கள்

**கம்ப்யூட்டர் ருடே வழங்கும்**

தினமும் வெல்லும் ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான கம்பியூட்டர் ருடே இலவச சந்தா

தினமொரு பரிசுப் போட்டி

UTHAYAN IT ISLAND

cfict GATEWAY CENTRE JAFFNA

**வழங்கும் 4½ லட்சம் ரூபா**

**மாபெரும் இறுதிப் போட்டி**

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

..........................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

..........................................

பெயர் : ..........................................

தே.அ.இல. : ..........................................

முகவரி : ..........................................

..........................................

போட்டி முடிவுத் திகதி 15.03.2011

மாபெரும் காலிறுதிப் போட்டி

இதற்கும் பரிசு உண்டு

1ஆம் பரிசு

தொகையை முடிந்தால் கற்பனை செய்துபாருங்கள்

2ஆம் பரிசு

காத்திருங்கள்

3ஆம் பரிசு

விரைவில் உங்கள் கைகளில் லட்சங்கள்

மாபெரும் இறுதிப் போட்டி

மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

**மாபெரும் காலிறுதிப் போட்டி**

காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறும் அணிகள் எவை?

1. .................... 5. ....................
2. .................... 6. ....................
3. .................... 7. ....................
4. .................... 8. ....................

பெயர் : ..........................................

தே.அ.இல. : ..........................................

முகவரி : ..........................................

..........................................


போட்டி முடிவுத் திகதி 10.03.2011

**போட்டி விதிகள்**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.

உதயன்
21 பெப்ரவரி 2011 திங்கட்கிழமை

# நியூஸியின் வேகத்தில் சரிந்தது கென்யா



-டிலீப்-

பந்து வீச்சில் பதம் பார்த்தது நியூஸிலாந்து. அடங்கிப் போய் விட்டது கென்யா. கிடைத்தது இலகு வெற்றி நியூஸிக்கு.

சென்னை சேப்பாக்கத்தில் இரண்டாவது மோதல் நேற்று. நியூஸிலாந்து - கென்யா பார்த்தனர் பலப் பரீட்சை. நாணயச் சுழற்சியில் வெற்றி கென்யாவுக்கு. தீர்மானித்தனர் துடுப்பெடுத்தாட.

இறங்கினர் ஒபண்டா - வோர்டேர்ஸ். தொடங்கியது ஆட்டம். சரிந்தது விக்கெட்டுக்கள். ஆரம்பம் பொறுக்கி எடுத்தனர் ஓட்டம். அதைக் கூட விட்டுவைக்கவில்லை நியூஸி. வாங்கிய அடிகளை தீர்த்தது கென்யாவுடன். தொடர் தோல்விகள் நியூஸிக்கு. முற்றுப் பெற்றது நேற்றுடன்.

சவுத்தீ சரிக்கத் தொடங்கினார் விக்கெட்டுக்களை. கை கொடுத்தார் பெனெட், சவுத்தீயுடன். இரட்டை இலக்கம் எட்டுவதற்கு கென்யர்கள் படாத பாடு. நியூஸியின் வெற்றித் தாகம் பந்து வீச்சு வெறியில் வெளிப்பாடு.

ஒபண்டா ஆறு ஓட்டங்களுடன் திரும்பினார் பவிலியன். வோர்டேர்ஸ் பதினாறுடன் பெனெட் பந்தில் வெளியேறினார். முதல் மூன்று விக்கெட்டுக்கள் சரிந்தது எல்.பி.டபிள்யூவில். பெனட்- சவுத்தீ சரிப்புக்கள் வந்தது நிறைவுக்கு. தொடங்கினார் ஓரம் தன் பங்கை. பின்வரிசை சரிந்தது ஓரமின் பந்தில். மத்திய வரிசைக்கு வந்தவர் பட்டேல். நிலைத்துக் கொண்டார் நியூஸியை சமாளித்து.

முன்னரங்குகள் முதல் பின்னரங்குகள் வரை நியூஸியின் ஊடறுப்பில் நிர்மூலம். கென்யாவின் பின்னணி வீரர்கள் மூன்றும் பெறவில்லை ஓட்டமெதுவும். கென்யாவின் பரிதாபத்திற்கு நியூஸி வழங்கியது பத்து உதிரிகள். நியூஸியை சமாளித்து பெற்றது 69 ஓட்டங்கள். 23.5 பந்து பரிமாற்றத்தில் வந்தது முடிவு கென்யர்களின் ஆட்டத்திற்கு.

கென்யர்களை ஆட்டிப் படைத்த பெனெட் கைப்பற்றினார் நான்கு விக்கெட்டுக்கள். அவருக்கு கைகொடுத்த சவுத்தீ, ஓரம் மூன்று விக்கெட்டுக்கள்.

பதிலுக்கு தொடங்கியது நியூஸி. பயிற்சி மோதல் நியூஸிக்கு இது. ஈ விரட்டும் இலக்கு இது. வந்தனர் குப்தில்-பிரண்டன் மக்லம் ஜோடி. பதம் பார்த்தனர் கென்யர்களின் பந்து வீச்சை. அடித்துப் பழகினர் அடுத்த போட்டிக்காக. பவுண்டரிகள், சிக்ஸர்கள் தாராளம். தொடர முடியவில்லை நியூஸியால். எட்டி விட்டனர் இலக்கை அதற்குள்.

குப்தில் 39 ஓட்டங்கள் பெற்றார் 32 பந்தில். ஐந்து பவுண்டரி, இரண்டு சிக்ஸர் இதனுள் அடங்கியது. மறுமுனை ம்க்கலம் கையில். 17 பந்தில் 26 ஓட்டங்கள் அவரால் பெறுகை. இதனால் எட்டாவது ஓவரில் வெற்றி நியூஸியின் கையில்.

பந்து வீச்சில் பலருக்கு சிம்மசொப்பனமான பெனெட் ஆட்டத்தின் நாயகன் விருதுக்குச் சொந்தம்.



**உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011**

## Action of the match




**ஆட்டமிழப்பு:** நியூஸிலாந்து - கென்யா அணிகளுக்கு இடையிலான போட்டியில் நியூஸிலாந்து அணி வீரர் பிரணடன் மக்கலம் 'Free Hit' க்கு அவரது விக்கெட் வீழ்த்தப்படும்வேளை,...

## 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இரண்டாவது ஆட்டம்

ஆட்டம்: நியூஸிலாந்து Vs கென்யா — நாணயச் சுழற்சி: கென்யா
முடிவு: நியூஸிலாந்து 10 விக்கெட்டுகளால் வெற்றி — ஆட்டநாயகன்: பெனெட்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஒபண்டா | lbw b சவுத்தீ | 06 | 19 | 01 | 0 |
| வோர்டேர்ஸ் | lbw b பெனெட் | 16 | 42 | 02 | 0 |
| ஒபுயா | lbw b பெனெட் | 14 | 19 | 00 | 0 |
| ரிக்கோலா | b பெனெட் | 02 | 02 | 00 | 0 |
| ஒயுமா | b பெனெட் | 01 | 06 | 01 | 0 |
| பட்டேல் | ஆட்டமிழப்பில்லை | 16 | 23 | 00 | 0 |
| கமன்டீ | c பிரன்டன் மக்லம் b ஓரம் | 02 | 16 | 00 | 0 |
| ஒடுயா | c ரைடர் b ஓரம் | 02 | 06 | 00 | 0 |
| ஒட்னியாம்போ | b சவுத்தீ | 00 | 06 | 00 | 0 |
| நொக்சீ | lbw b சவுத்தீ | 00 | 01 | 00 | 0 |
| ஓர்ரினோ | c ஸ்ரைரீஸ் b ஓரம் | 00 | 04 | 00 | 0 |
| உதிரிகள் | b 4, lb 3, w 2, nb 1 | 10 | | | |

TOTAL - 69/10 (23.5)

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சவுத்தீ | 06 | 13 | 3 | 0 |
| நதன் மக்லம் | 04 | 15 | 0 | 0 |
| பெனெட் | 05 | 16 | 4 | 0 |
| வெட்டோரி | 06 | 16 | 0 | 1 |
| ஓரம் | 2.5 | 2 | 3 | 1 |

1-14 (ஒபண்டா), 2-40 (வோர்ட்டேர்ஸ்), 3-42 (ரிக்கோலோ), 4-44 (ஒபுயா), 5-49 (ஒயுமா), 6-59 (கமன்டீ), 7-63 (ஒடுயா), 8-68 (ஒட்னியாம்போ), 9-68 (நொக்சீ), 10-69 (ஓர்ரினோ)

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| குப்தில் | ஆட்டமிழப்பில்லை | 39 | 32 | 5 | 2 |
| பிரன்டன் மக்லம் | ஆட்டமிழப்பில்லை | 26 | 17 | 4 | 0 |
| ரைடர் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ரெயிலர் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பிராங்லின் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஸ்ரைரீஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| வெட்டோரி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| நதன் மக்லம் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஓரம் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சவுத்தீ | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பெனெட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | b 2, lb 1, w 3, nb 1 | 07 | | | |

TOTAL - 72/0 (08)

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஒடுயா | 03 | 25 | 0 | 0 |
| ஓர்ரினோ | 02 | 18 | 0 | 0 |
| கமன்டீ | 02 | 21 | 0 | 0 |
| ஒட்ஹியாம்போ | 01 | 05 | 0 | 0 |

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

உலகக் கிண்ண வாசகர் கணை

# 10 ஆவது உலகக் கிண்ணம் யாருக்கு?



எல்லோரும் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த 10 ஆவது (2011) உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாகி விட்டன. மக்கள் அனைவரின் மனதிலும் 10ஆவது உலகக் கிண்ணம் யார் கையில் தவழப் போகின்றது என்ற எண்ணம் போட்டிபோடுகின்றது. இதில் பெரும்பாலானோரின் கருத்தின்படி ஆசிய நாடுகளான இலங்கை, இந்தியா, பாக்கிஸ்தான் நாடுகளில் ஒரு நாடு கிண்ணத்தினை வென்று வரலாறு படைக்கும் என்ற எண்ணமும் நம்பிக்கையும் காணப்படுகின்றது.

ஒவ்வெரு முறையும் உலகக் கிண்ணத் தொடருக்கான ஆரம்பத்தின் போது ஏதாவது ஒன்று அல்லது இரண்டு அணிகள் மட்டுமே பெரும் எதிர்பார்ப்புடன் அதாவது போதிய அளவு திறமையுடன் களம் இறங்கும். அவைகள் மட்டுமே பெரும்பாலான எழுச்சியுடன் காணப்படும். ஆனால் இந்தமுறை களம் இறங்கும் நாடுகளில் 80 வீதமான அணிகள் தமது பாரிய எழுச்சியினை வெளிப்படுத்தி இருக்கின்றன. அணிகள் அனைத்தும் உலகக் கிண்ணத்துக்கான ஆயத்த பயிற்சிப் போட்டிகளில் சாதித்தும் உள்ளன.

**இலங்கை-** இலங்கை அணியானது ஒரு நாள் தொடரில் தரவரிசையில் மூன்றாம் இடத்தில் உள்ளது. இந்த அணிக்குக் கடந்த 6 மாதங்களாக முக்கியமான எதுவித போட்டிகளும் இருக்கவில்லை. இருப்பினும் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள மிகுந்த போராட்டத்தின் மத்தியில் பயிற்சியுடன் களம் இறங்குகின்றது. இந்த அணியில் முன்னைய தலைவர் மஹேலவுடன் சங்கக்கார, மத்தியூஸ், டில்சான், தரங்க, கப்புக்கெதர என துடுப்பாட்ட வரிசையும் மாலிங்க, முரளிதரன், குலசேகர போன்ற அனுபவ பந்து வீச்சாளர்களுடனும் அணி களம் இறங்குகின்றது. இந்தமுறை இடம் பெற்ற பயிற்சி ஆட்டங்கள் இரண்டிலும் வெற்றி கொண்டு களிப்புடன் காணப்படுகின்றது.

இதைவிட இன்னுமொரு களிப்பானது 2007ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் இரண்டாவதாக வந்தவர்கள் இவர்களே. அதுவும் முதல் சுற்றில் இந்தியாவைப் புறமுதுகுடன் திரும்பவைத்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது

**இந்தியா** - 2007 இல் முதல் சுற்றுடனேயே பரிதாபமாக வெளியேறிய இந்தியா புதிய தலைவர், புதிய வீரர்கள் எனப் புதியதொரு அணி. இந்தமுறை உலகக்கிண்ணம் கைப் பற்றக் களமிறங்கும். திறமைமிக்க நாடுகளில் இதுவும் ஒன்று. அத்துடன் டோனியின் அதிர்ஷ்டமும் இந்தியாவுக்கு உண்டு.

**ஆஸ்திரேலியா-** இதுவரை காலமும் அசைக்க முடியாத மதிலாக இருந்த ஆஸி இரண்டு மாதங்களில் மழையில் நனைந்த அணை போல மாறி விட்டது. ஆஷஷ் தோல்வி. அது மட்டுமன்றி பயிற்சிப் போட்டி இரண்டிலுமே தோல்வி எனக் கேள்விக் குறியாக இருக்கின்றது. இந்தமுறை கில்லி, மத்தியூ ஹெய்டன், ஹசி, மெக்ராத் போன்ற பழைமையான, அனுபவமான வீரர்கள் இன்றித் தடுமாற்றத்துடன் களம் இறங்குகின்றது. திடீர் எழுச்சியடையும் நாடுகளின் முதலாவது அணி ஆகும். எனவே எது வேண்டுமானாலும் நடக்கலாம்.

**தென்னாபிரிக்கா-** போட்டிகளில் பலத்த அழுத்தத்தைக் கொடுக்கும் நாடுகளில் முதன்மையானது தென்னாபிரிக்கா. இளமைத் துடிப்புள்ள அதுமட்டுமன்றி போராடக்கூடிய திறமை கொண்ட வீரர்கள் உள்ளடக்கிய அணியாக தென்னாபிரிக்கா காணப்படுகின்றது. ஆனால் அதிர்ஷ்டம் இல்லாத அணியாகக் காணப்படுவதனால் எந்தவொரு கிண்ணத்தினையும் வெல்லக் கொடுத்து வைக்கவில்லை. இருப்பினும் இந்தமுறை இந்தச் சாதனை மாற்றமடையலாம்.

**இங்கிலாந்து-** கடந்த உலகக் கிண்ணப்போட்டிகளில் பங்குபற்றிய வீரர் களான அன்ரூ ஸ்ரோரஸ், கொலிங்வூட், இயன்பெல், பீற்றர்சன் போன்றோரில் ஆக்ரோஷம் கிண்ணத்தை விட்டு வைப்பதாக இல்லை. கிண்ணம் வெல்லக் கூடிய நாடுகளில் இதுவும் ஒன்றாகக் கணிக்கப் படுகின்றது.

**பாகிஸ்தான்-** 2007 இல் முதல் சுற்றுடன் வெளியேறிய அணி. அயர்லாந்திடம் படுதோல்வி எதிர்பாராதபடி வூல்மரின் (பயிற்சியாளர்) கொலை. இவற்றின் பின்னர் முன்னணி வீரர்கள் சூதாட்டம் என்று சோதனைகள் அனுபவித்து சற்று மீண்டு வந்துள்ளது. இங்கும் அனுபவம் வாய்ந்த வீரர்களான அப்துர் ரஷாக், மிஸ்பா உல்ஹக், யுனிஸ்கான், அப்ரிடி போன்றோரும் காணப் படுகின்றனர். ஆசியாவில் கிண்ணம் வெல்லும் நாடுகளில் பாகிஸ்தானும் கருதப் படுகின் றது.

**அயர்லாந்து-** 2007 இல் பாகிஸ்தானை வெற்றி கொண்டு முதல் முறையாக தனது இரண்டாம் சுற்றுக் கனவினை நனவாக்கியது. இந்த முறை பயிற்சிப் போட்டியில் நியூசிலாந்திடம் 32 ஓட்டங்களால் தோற்றாலும் 272 ஓட்டங்களைப் பெற்றது, ஒரு பெரிய சவாலே. ஆசிய ஆடுகளங்களில் இந்த ஓட்டம் ஒரு சவாலானதே. அணித் தலைவர் வுரட்வீல்ட், பிறாயன் சகோதரரின் வேகம் சாதிக்கலாம்.

**மேற்கிந்தியத்தீவுகள்-** தரவரிசையில் இறக்கம் கண்ட மேற்கிந்தியத் தீவுகளானது முதலாம், இரண்டாம் உலகக் கிண்ணத்தை வென்றவர்களாவர். இந்தமுறை அனுபவ வீரரான கிறிஸ் கெய்ல், சர்வான், சந்தர் போல், பொலாட், பிராவே போன்றோரின் வீரதீரத் தன்மையில் சிலவேளைகளில் எழுச்சியினை ஏற்படுத்தலாம்.

இவை தவிர ஏனைய அணிகள் பெரிதாக எந்தவொரு சவாலினையும் ஏற்படுத்தாது என்ற கணிப்புக் காணப்படுகின்றது.

இந்தமுறை உலகக்கிண்ணமானது ஆசிய நாடுகளில் போட்டிகள் நடைபெறுவதால் ஆசிய அணிகளில் ஏதாவது ஒரு அணி சாதனை படைக்கும் எனலாம். ஏனெனில் இந்த உலகக் கிண்ணத் தொடரில்

1983 இல் இந்தியா, (வெற்றி)
1992 இல் பாகிஸ்தான், (வெற்றி)
1996 இல் இலங்கை, (வெற்றி)
1999 இல் பாகிஸ்தான் , (தோல்வி)
2003 இல் இந்தியா , (தோல்வி)
2007 இல் இலங்கை , (தோல்வி)

ஆசிய அணிகள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன. இதில் 3அணிகளும் ஒவ்வொரு முறை அதுவும் ஆசியாவில் நடைபெறுவதால் இறுதிப் போட்டியில் வாய்ப்பு ஆசிய அணிகளில் ஒன்றுக்கே கிடைக்கும்.

எது எப்படி இருப்பினும் எதிர்காலம் யார் கையிலே பொறுத்திருந்து பார்ப்போம்.

அ.றொ.றொட்னி பிரசாந்
கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.





# இறைபதம் அடைந்த அன்னைக்கு அஞ்சலி



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரான
வேலுப்பிள்ளை பிரபாகரனின் தாயான
பார்வதியம்மாளின் மறைவுக்கு எமது துயரமிக்க
அஞ்சலிகள். நீண்டகாலம் பல்வேறு
இன்னல்கள், நெருக்கடிகள், சிக்கல்கள்
ஆகியவற்றுக்கு முகம் கொடுத்து தரணியில்
உயர்ந்த நிலையில் இருந்த அன்னையின்
மறைவால் தமிழர் தாயகமே துக்கத்தில்
ஆழ்ந்துள்ளது. எமது மக்களின் விடிவுக்காக
உழைத்தவரின் தாயாக இருந்து
இவ்வுலகில் பெருமைக்குரிய அன்னையாக
விளங்கிய பார்வதியம்மாளுக்கு
எமது இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்
உரித்தாகட்டும்.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
## யாழ்ப்பாணம்.

(சி-576167)

உதயன்

# மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர முடிவு காண்க!

இலங்கை மீனவர்களுக்கும் - அதாவது வடபகுதி தமிழ் மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் - அதாவது தமிழ்நாடு மீனவர்களுக்கும் இடையில் கடற்பரப்பில் பிணக்கு அல்லது மோதல் ஏற்படுவதானது இந்த இரு நாடுகளின் பல்வேறுபட்ட உறவுகளுக்கும் ஆப்புவைப்பதாக முடிந்துவிடும் என்பது ஒருபுறமிருக்க இந்த இரு பிரிவினருக்குமிடையில் ஆதிகாலம் தொட்டு இருந்துவரும் தொப்புள்க்கொடி உறவுக்கும் வேட்டுவைப்பதாக அமைந்துவிடும்.

எனவேதான் கடற்பரப்பில் இருநாட்டு மீனவர்களுக்குமிடையில் உருவாகியுள்ள அல்லது உருவாக்கப்பட்டுள்ள சிக்கல்களுக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படவேண்டும் என்பதை நாம் இந்த பத்திகளில் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வற்புறுத்தி வந்துள்ளோம். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் பரப்பின் தூரம் 30 மைல்களுக்குமேல் போகாது என்றே கருதப்படுகின்றது. வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே இந்தக் கடல் வழியாக இரு நாடுகளுக்குமிடையில் கலை, கலாசார, வாணிபத்துறைகளில் பல்வேறு தொடர்புகள் இருந்துவந்துள்ளன. அதேசமயம் இரு நாடுகளுக்குமிடையில் மோதல்களும் ஆட்சி அதிகாரப் போட்டிகளும் கூட நிகழ்ந்திருக்கின்றன.

இருந்தாலும், ''நீர் அடித்து நீர் விலகிச் செல்வதில்லை'' என்ற முதுமொழிக்கொப்ப இருதரப்பு உறவுகளும் பலம் பெற்றுவந்துள்ளனவேயன்றி பகைமை நீடித்து நிலை பெற்றதாகவோ உறவுகள் அறுந்து போனதாகவோ தகவல் இல்லை.

இதற்கு முக்கிய காரணம் இரு நாட்டு மக்களுக்குமிடையில் உள்ள உறவுகளில் இரத்த உறவு முக்கியமானது.

இந்த நாட்டின் பேரினமக்களின் தோற்றுவாய் எனக் கருதப்படும் விஜயகுமாரனும் தோழர்களும் பிற்காலத்தில் தென்னிந்தியாவில் திருமணம் புரிந்துகொண்டு வந்தவர்கள் என்பது புதியகதையல்ல,

இலங்கையிலுள்ள மக்கள் கேரளாவையும், கர்நாடகத்தையும் சேர்ந்தவர்களின் வழித்தோன்றல்கள் என்று அண்மையில் இலங்கை அமைச்சர் ஒருவர் கூறியிருக்கிறார்.

எதுவாய் இருந்தாலும் இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடை யில் உருவாகியுள்ள மீன்பிடி பிரச்சினையானது இருநாடுகளுக்குமிடை யில் அரசியல் மட்டத்தில் மட்டுமின்றி ராஜதந்திரமட்டத்திலும் உச் சத்தை எட்டியிருக்கிறது.

கடல் பரப்பில் என்ன நடக்கிறது என்பது தூரத்தில் இருக்கும் சாதாரண மக்களுக்கு தெரியாது. களத்தில் இறங்கியுள்ள இருதரப்பு மீனவர்களுக்கே அதுவெளிச்சம்.

அத்துமீறி பிரவேசித்து எமது பகுதியில் மீன்பிடித்தது மட்டுமின்றி வலைகளையும் நாசம் செய்துள்ளார்கள் என்று கூறி இந்திய மீனவர்களை இலங்கை மீனவர்கள் மடக்கி பிடித்தார்கள் என்று கூறப்பட்டது. பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

இதே காலகட்டத்தில் கடலில் மீன் பிடிக்கச்சென்ற இலங்கை மீனவர்கள் சிலரும் இந்தியப் பகுதியில் மடக்கிப்பிடிக்கப்பட்டனர் என்று கூறப்பட்டது.

பொதுவில் இம் மாதிரி செயற்பாடுகள் ஏட்டிக்குப் போட்டியாக நடைபெறும்போது நிலைமை மோசமடையக்கூடும் - அதனால் இருநாடுகளுக்குமிடையில் உறவுகள் சீர்கெட்டுவிடுமேயன்றி பிரச்சினை முடிவுக்குவரமாட்டாது.

இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்ட விவகாரம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்திய தலைநகரிலும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. மாநில சட்டமன்றத் தேர்தல்கள் வரவிருப்பதன் காரணமாக இந்திய மீனவர் விவகாரத்தில் அரசியல்கட்சிகள் முண்டியடித்துக்கொண்டு போராட்டத்தில் குதித்திருக்கின்றன. தி.மு.க.வினர் மட்டுமல்ல காங்கிரசாரும் தமிழக மீனவர்களுக்காக உரத்துக் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டனர். இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் நேரடியாக தொடர்புகொண்டு பேசினார் - அவர் என்னபேசினார் என்பது முழுமையாக வெளிவராவிட்டாலும் இந்திய அமைச்சர் சற்று கடுமையான தொனியிலேயே பேசியிருக்கவேண்டும்.

எவ்வாறோ இந்திய மீனவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு இலங்கை மீனவர்களும் நாடுதிரும்பியுள்ளனர்.

இது இம்மட்டுடன் முடிவடைந்து விட்டதாக இருக்கமுடியாது. இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்கள் தொழில் செய்யும் பகுதிக்குள் அத்துமீறி நுழைகிறார்கள் என்பது இப்பொழுதுதான் எழுகின்ற குற்றச்சாட்டு என்பதில்லை. எனவே இதற்கு நிரந்தமாகவே ஒரு முடிவு ஏற்படுத்தப்படவேண்டும். அது இரு தரப்பு மீனவருக்குமே பாதகம் இல்லாதவகையிலான ஒரு தீர்வாக இருக்கவேண்டும்.

இந்தநிலையில், மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு இரு நாடுகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வதற்கான முயற்சி நடைபெறுவதாக செய்திவந்திருக்கிறது. இரு நாடுகளுக்குமிடையிலான கூட்டுக்குழுவின் கூட்டம் விரைவில் நடைபெறவிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

எதுவானாலும் இந்திய மீனவர்கள் இக் கடல் பிரதேசத்தில் தாக்கப்படுவதற்கும் இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களுக்குரிய பகுதிகளுக்குள் பிரவேசிக்காமல் இருக்கும் வகையிலும் முடிவொன்று எடுக்கப்படுமானால் அது எல்லோருக்குமே நல்லது .

ஒப்பந்தம் ஏற்பட்டால் மட்டும் போதாது அது முறையாக செயற்படுத்தப்படுவதற்கான ஏற்பாடும் அவசியம்.

### கட்சி தாவும் படலம் ஆரம்பம்

# மு.கா. வேட்பாளர்கள் இருவர் தேசிய காங்கிரஸில் இணைந்தனர்

### ஸ்ரீரங்கா கட்சி வேட்பாளர்கள் அரசு பக்கம் தாவினர்

கொழும்பு, பெப். 21

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கு முன்னரே கட்சி தாவும் படலம் ஆரம்பமாகி விட்டது. அக்கரைப்பற்று மாநகர சபைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த இருவர் தேசிய காங்கிரஸில் இணைந்துள்ளனர்.

ஜெ.ஸ்ரீரங்காவின் பிரஜைகள் முன்னணி சார்பில் முல்லைத்தீவு, பாண்டியன் குளம் பிரதேச சபைக்குப் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் ஞானசீலன் ரொபின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துள்ளார்.

இவருடன் பிரஜைகள் முன்னணியின் மற்றுமொரு வேட்பாளரும் ஐ.ம.சு. முன்னணியில் இணைந்தார் என ஹுனைஸ் பாருக் எம்.பி. தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபைத் தேர்தலில் ஸ்ரீல.மு.காங்கிரஸ் பட்டியலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கடந்த வாரம் தேசிய காங்கிரஸில் இணைந்து கொண்டமை தெரிந்ததே.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மற்றுமொரு ஸ்ரீல.மு.காங்கிரஸ் வேட்பாளரும் தேசிய காங்கிரஸில் இணைந்துகொண்டார்.

அக்கரைப்பற்று மாநகர சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தேசிய காங்கிரஸும் நேரடியாக மோதுகின்றன. இவ்விரு கட்சிகளுடன் மேலும் இரு சுயேச்சைக் குழுக்கள் இங்கு போட்டியிடுகின்றன.

தேர்தலுக்கு முன்னர் மேலும் சில மு.கா. வேட்பாளர்கள் தேசிய காங்கிரஸில் இணையவுள்ளனர் என அமைச்சர் அதாவுல்லாவின் ஊடக ஆலோசகர் ஜே.எம்.வஸீர் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

# ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற படகு மடக்கிப் பிடிப்பு

### 17 இலங்கையர் கைது

கொழும்பு, பெப். 21

இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் படகொன்றில் செல்வதற்கு முயற்சித்த 17 பேரைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர் என கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூர்ய நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டைக்கு தெற்கே 20 கடல் மைல் தொலைவில் இவர்கள் நேற்று முன்தினம் மாலை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் அம்பாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் பயணித்த படகும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(ஒ-சி)

# 'புலர்ந்தது புது வசந்தம்' கலாசார நிகழ்வு நாளை முதல் வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், பெப். 21

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் 'புலர்ந்தது புதுவசந்தம்' கலாசார நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமையும் நாளை மறுதினம் புதன்கிழமையும் மாலை 5.30 மணிமுதல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண அமைச்சுக்கள் யாழ்ப்பாணத்தில் இயங்கத் தொடங்கியுள்ள இந்த வேளையில் மேற்படி கலாசார நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என். ஸ்ரீதேவி தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநரின் பணிப்பின் பிரகாரமும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் வழிப்படுத்தலின் பிரகாரமும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மேற்படி கலாசார நிகழ்வில் வடமாகாணத்தின் முன்னணி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கலைஞர்கள், கலை அபிமானிகள் மேற்படி நிகழ்வில் கலந்துசிறப்பிக்க உள்ளனர்.

கலைஞர் சு.கோபிதாஸ் குழுவினர் வழங்கும் வாத்திய பிருந்தா, கலாநிதி எஸ். ஸ்ரீதர்சனன் குழுவினர் வழங்கும் நர்த்தனாஞ்சலி, மானிப்பாய் கலைக் கோயில் கலாமன்றம் வழங்கும் விநாயகர் துதி, மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்கள் வழங்கும் மல்லாரி, கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலய மாணவர்கள் வழங்கும் நடனம், வவுனியா கலைநிலா மன்றம் வழங்கும் உயிரின் ஓசை நடனம், வவுனியா பரக்கும்பா மகாவித்தியாலய மாணவர்களின் 'வசந்த உதானசிரிய' நடனம்-

கொக்குவில் கலாபவனம் வழங்கும் புதியதோர் உலகம் செய்வோம் நடனம், யாழ். திருமுறைக் கலாமன்றத்தின் அசோகா நடனம், உரும்பிராய் கலைக்கோயில் வழங்கும் வசந்த உற்சவம் நடனம், வவுனியா சிதம்பரஸ்வரம் நடனாலயம் வழங்கும் தேவலோகத்தில் நடனம், மன்னார் நர்த்தனாலய நாட்டிய மன்றம் வழங்கும் மரபுசார் நடனம் -

வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி வழங்கும் மலர்ந்தன மலர்கள் நடனம், வவுனியா பரதஸேஸ்திரம் மன்றத்தின் கைகோர்ப்போம் உயர்ந்து நிற்போம் நடனம், வவுனியா ராகஸ்வரம் இசைக்குழுவின் 'வடக்கின் இசை' இசை நிகழ்வு என்பனவும் இடம்பெறும்.

சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள் கலைநிகழ்வுகளை நெறிப்படுத்தி வழங்கவுள்ளனர்.(ஒ)

# தலைக்கவசம் அணியாது பயணித்த பொலிஸ் சார்ஜன்டுக்கும் தண்டம்

பாதுகாப்பு தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளொன்றின் பின் இருக்கையில் அமர்ந்து பயணித்த தபுத்தேகம பொலிஸ் தலைமையகத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கு ரூபா 550 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 17ஆம் திகதி பொலிஸ் உடையுடன் பாதுகாப்புத் தலைக்கவசம் இன்றி மேலுமொரு பொலிஸ் உத்தியோகத்தரால் செலுத்திச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் தபுத்தேகம நகர வீதியில் மேற்படி பொலிஸ் சார்ஜன்ட் பயணித்த வேளையில் தபுத்தேகம போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் இன்ஸ்பெக்ரர் மகேஸ் குணசேகரவிடம் இவர் சிக்கிக்கொண்டதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.



அளவெட்டி வடக்கு
தவளக்கிரி முத்துமாரியம்மன் கோயில்

## பொதுச் சபைக் கூட்டம்

மேற்படி ஆலயப் பொதுச்சபையின் கூட்டம் புதிய நிர்வாக சபையைத் தெரிவுசெய்யும் முகமாக *06.03.2011 (மாசி மாதம் 22 ஆம் நாள்)* ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆலய மண்டபத்தில் திரு.க.நந்தகுமாரன் தலைமையில் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.
அன்றைய தினம் புதிய நிர்வாக சபைத் தெரிவும் பிற விடயங்களும் ஆராயப்பட இருப்பதால் அனைத்துப் பொதுச் சபை உறுப்பினர்களையும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அங்கத்தவர்களுக்குத் தனிப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்படவில்லை. எனவே இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*தவளக்கிரி.*
*21.02.2011*

**ஆலய பரிபாலன சபையினர்.**

## பருத்தித்துறை Y.M.C.A

பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றது.
துறைசார்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்

1. பிராந்திய திட்ட இணைப்பாளர் (முழுநேரம்)
2. விளையாட்டு - வாழ்வாதார அபிவிருத்தி இணைப்பாளர் (முழுநேரம்)
3. சமூக அபிவிருத்தி பயிற்றுநர்கள் (பகுதி நேரம்)
   I. சித்திர வடிவமைப்பும், நாடக அரங்கியலும்
   II. இசையும், நடனமும்
4. விளையாட்டுப் பயிற்றுநர்கள் - 2 (பகுதி நேரம்)

விண்ணப்ப இறுதிநாள் - 2011.02.28
சுயவிவரக் கோவையுடன் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

**பொதுச் செயலாளர்**
Y.M.C.A *பணிமனை,*
*கோவிற் சந்தை, கட்டைவேலி, கரவெட்டி*

## கண்ணீர் அஞ்சலி

எமது சகஆசிரியை திருமதி ஜெயதாரணி கிருபாகரன் அவர்களின் தாயும் எமது பாடசாலை மாணவர்களான 11A செல்வி கி. விதுஜா 9A செல்வன் கி. மகீவன் அவர்களின் பேர்த்தியுமாகிய

### திருமதி இராசரத்தினம் பூலட்சுமி

அவர்கள் 17.02.2011 அன்று இயற்கை எய்திவிட்டார். அதனையிட்டு நாம் மனம் வருந்துகின்றோம். மேலும் அவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/சங்கானை சிவப்பிரகாச
மகா வித்தியாலயம்,
மல்லாகம் வீதி, சங்கானை.

பாடசாலை சமூகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி இளையாச்சி பொன்னம்பலம்



கேசரி வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் முத்தட்டுமட வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இளையாச்சி பொன்னம்பலம் நேற்று (20.02.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை பொன்னம்பலத்தின் பாசமிகு மனைவியும் சந்திராதேவி, இராசகுமார், ஜெயக்குமார், றஞ்சினிதேவி ஆகியோரின் பாசமிகு தாயும் செல்வராஜா, சாந்தினி, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிஷாந்தி, நிஷாந், நிஷானி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2011) திங்கட்கிழமை பிற்பகல் 12 மணியளவில் அவரின் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக் கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முத்தட்டு மட ஒழுங்கை,*
K.K.S. *வீதி,*
*கோண்டாவில் மேற்கு.*

*தகவல்:*
பொ.ஜெயக்குமார் (மகன்).

## மாணவன் காயம்

தென்மராட்சி, பெப். 21

ஷெல் வீச்சில் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட பனை மரத்தில் கிளி பிடிக்க ஏறிய வேளையில் மரம் முறிந்ததில் கீழே வீழ்ந்து பாடசாலை மாணவன் காயமடைந்தார்.

நுணாவில் மத்தியில் நேற்று இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மோகனதாஸ் விதுஷன் (வயது 15) என்னும் மாணவன் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-207)

## நிரப்பப்பட்டுவரும் முற்றவெளிப் பள்ளங்கள்

யாழ். முற்றவெளி பிரதேசங்களில் தாழ்ந்த பகுதிகள் கிறவல் மண் மூலம் சீர்செய்யும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கோட்டை சுற்றாடல் பகுதியை அண்டிய பகுதிகளில் தாழ்ந்த இடங்களை இவ்வாறு கிறவல் மண்ணைக்கொண்டு நிரப்பப்படவுள்ளது.

கோட்டையில் இருந்து அகற்றப்படும் கிறவல் மண்ணையே இந்த பகுதியில் கொட்டப்பட்டு வருகின்றன.

கோட்டையை சுற்றி அகழியை அண்டிய தாழ்ந்த இடங்களே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன. (ஐ-26)

## இயக்கச்சி ஆலயத்தில் பொதுக் கூட்டம்

பளை, பெப். 21

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலய பொதுக்கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

ஆலய உபயகாரர்கள், திருப்பணி செய்யவுள்ளவர்கள், புதிதாக உபயம் செய்ய விரும்புபவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

(ஒ-207)

## நீதிபதிகளுக்கு அறிவுறுத்து

அமைதியான சூழல் மாத்திரமின்றி சட்டமும் நியாயமும் அவசியம் என்று பிரதம நீதியரசர் அசோக் என்.டி.சில்வா தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் நேற்று கிழக்கு மாகாணத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார். இந்நிலையில் அம்பாறையில் நேற்று நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எந்தவொரு வழக்கிலும் சாட்சியங்களையும், சட்டத்தையும் முன்னிலைப் படுத்தியே நீதிபதிகள் அதற்கான தீர்ப்பை வழங்குகிறார்கள். அத்துடன் நிதானமாக அவதானித்து தீர்ப்புக்களை வழங்குமாறு இதன்போது பிரதம நீதியரசர் நீதிபதிகளிடம் வலி யுறுத்தினார்.

இதேவேளை பிரதம நீதியரசர் அசோக் என் டி சில்வா மற்றும் நீதி அமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கிம் உள்ளிட்ட குழுவினர் கல்முனை நீதிமன்றத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டனர்.

(05)

## 6 பிள்ளைகளின் தாய் வெட்டிக்கொலை

கொழும்பு, பெப்.21

தம்பகல பொலிஸ் வலயத்துக்குட்பட்ட, கோட்டகல ஹெக் கிரில்ல பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை ஆறு பிள்ளைகளின்தாயொருவர் காட்டுக் கத்தியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஹெக்கிரில்ல பிரதேசவாசியான புஞ்சி நோனா என்ற 56 வயதுடைய பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

பெண்ணின் சடலம் வீட்டுக்குப் பின்புறத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. சடலத்தின் கழுத்திலும், தலையிலும் வெட்டுக் காயங்கள் காணப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்
நா.விமலேஸ்வரனின் அன்பு மாமனார்

### க. இளையதம்பி

(12.02.2011) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி அதிபர்
திரு.பொ.சிவானந்தராசா அவர்களின்
அன்புத் தந்தையார்

### இராசையா பொன்னம்பலம்

அவர்கள் நேற்று (20.02.2011) ஞாயிற்றுக்கிழமை இறைபாதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திடைய ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலயம்,
காரைநகர்.

ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### துரையப்பா நடராசா



ஒட்டுவெளி மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், கோயில் சந்தை கரவெட்டியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட துரையப்பா நடராசா நேற்று (20.02.2011) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் கிளாலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசையா -செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், முத்துப்பிள்ளையின் (குஞ்சு) அன்புக் கணவரும், வினோதரன், வினோதாசன், வினோகரன், டயாழினி, வினோரூபன், வினோகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப 10 மணியளவில் அவரது தற்காலிக வதிவிடமான கோயில் சந்தை கரவெட்டி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரவெட்டி வேருண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நி.முகவரி-**
**ஒட்டுவெளி, மிருசுவில்.**
**தற்காலிக முகவரி-**
**கோயில் சந்தை, கரவெட்டி.**

தகவல்:
குடும்பத்தினர்.

### லயன் நடராசா சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற கணக்காளர்/பொது முகாமையாளர், வடபிராந்திய போக்குவரத்துச் சபை, தலைவர் - சுதுமலை முருகமூர்த்தி ஆலயம்)



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவசுப்பிரமணியம் நேற்று (20.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - புவனேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் சுசிலையின் அன்புக் கணவரும் பிரதீபன் (ஆசிரியர், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), கௌசலை (பிரதேச செயலகம், உடுவில்), Dr.மேகலை (பிரதேச சபை, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தமிழினி, தவசொரூபன் (தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்), Dr.கிரிதரன் (கால்நடை வைத்தியர், வேலணை) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான அருந்ததி, சிவராஜா, குமாரகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கஜன், கார்த்திகன், விசாலினி, காயத்திரி, சஞ்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.02.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்திலிருந்து பி.ப. 12.30 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்பு: 021 3211525*
*"முருகவில்லா",*
*சுதுமலை தெற்கு, மானிப்பாய்*

தகவல்:
குடும்பத்தினர்.

# கச்சதீவு ஒப்பந்தத்தை இந்தியா மறு ஆய்வு செய்ய வேண்டும்



மீனவர் பிரச்சினைக்குத் நிரந்தரத் தீர்வு காண கச்சதீவு ஒப்பந்தத்தை இந்தியா மறு ஆய்வுசெய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் து. ராஜா வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக மதுரையில் கடந்த வெள்ளிக்கிழமை அவர் அளித்த பேட்டி வருமாறு:

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் தொடர்கதையாக உள்ளன.

சமீபத்தில் 100 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

கைதான மீனவர்களை உடனடியாக விடுதலை செய்வதுடன் அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகள், வலைகள் மீண்டும் கொடுக்கப்பட வேண்டும்.

மீனவர் மீது தொடரும் தாக்குதலைத் தடுத்து நிறுத்த தி.மு.க அங்கம் வகிக்கும் மத்திய அரசு எந்த அக்கறையும் காட்டவில்லை.

இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதற்கும் தங்களுக்கும் எந்த விதசம்பந்தமும் இல்லை என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உண்மைக்கு மாறான தகவல்களைக் கூறிவருகிறார். இலங்கையைத் தவிர யாரும் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்த வாய்ப்பே இல்லை. இந்தப் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தியா தெரிவிக்க வேண்டும்.

சர்வதேச கடல் விதிகளுக்கு மாறாக மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் இலங்கை அரசு மீது சர்வதேச நீதிமன்றத்தில் இந்தியா குற்றம் சுமத்த முடியும். ஆனால், அதைச் செய்ய மத்திய அரசு தயங்குவது ஏன் என்று புரியவில்லை.

இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழக மீனவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு, மீன் பிடிக்கும் உரிமை கிடைக்க வேண்டுமானால் இலங்கையுடன் செய்து கொண்ட கச்சதீவு உடன்பாட்டை மறுஆய்வு செய்ய வேண்டும்.

மீனவர் பிரச்சினையில் மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க நேர்மையுடன் நடந்துகொள்ளவில்லை. மீனவர்கள் பிரச்சினை குறித்து நாடாளுமன்றக் கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேள்வி எழுப்பும்.

டில்லியில் தொலைக்காட்சி செய்தி ஆசிரியர்கள் சந்திப்பின் போது, கூட்டணி தர்மத்துக்காக சில விடயங்களில் சமரசம் செய்துகொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது.-என்றார்.

# எனக்கு சி.பி.ஐ.யில் இருந்து சமன் ஏதும் வரவில்லை

## கனிமொழி எம்.பி.மறுப்பு



சி.பி.ஐ.யில் இருந்து எனக்கு சமன் எதுவும் வரவில்லை'' என்று கவிஞர் கனிமொழி எம்.பி. கூறியுள்ளார். இதேவேளை 2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தை விசாரிக்கும் சி.பி.ஐ., கவிஞர் கனிமொழி எம்.பி.க்கு சமன் அனுப்பப்போவதாக ஆங்கில பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை தொலைக்காட்சி ஒன்றுக்கு கனிமொழி எம்.பி. பேட்டி அளித்தார்.

அதன்போது 2-ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கை விசாரிக்கும் சி.பி.ஐ., உங்களை விசாரிக்க சமன் அனுப்பியதாக கூறப்படுகிறதே? என்று நிருபர் கேட்டதற்கு, ''அதுபோல சமன் எதுவும் எனக்கு வரவில்லை'' என்று கனிமொழி எம்.பி. மறுத்தார்.

கலைஞர் ரி.வி. அலுவலகத்தில் நடைபெற்ற சி.பி.ஐ. சோதனை குறித்து அவரிடம் கேட்டபோது, ''எனக்கு அந்த விடயம் தொடர்பாக எதுவும் தெரியாது. நான் கலைஞர் ரி.வி. அலுவலகத்திற்குச் செல்லவில்லை'' என்றார்.

இதனைத்தொடர்ந்து இந்த விடயத்தில் கலைஞர் ரி.வி.யின் நிலை என்ன? என்று கனிமொழி எம்.பி.யிடம் கேட்கப்பட்ட போது, ''கலைஞர் ரி.வி.யின் நிலை தெளிவாக இருக்கிறது. அதன் தலைமை நிர்வாக அதிகாரி சரத்குமாரும் தெளிவாகக் கூறிவிட்டார். இதில், மறைக்கக் கூடிய விடயம் எதுவும் இல்லை'' என்று தெரிவித்தார்.

# அ.தி.மு.க.தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்கிறார் வைகோ

சென்னை, பெப். 21

சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. அணி மாபெரும் வெற்றி பெறும். அ.தி.மு.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் - என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.கவின் மாநிலப் பொதுக் குழுக்கூட்டம் சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்ட அரங்கில் செய்தியாளர்களிடம் வைகோ தெரிவித்தவை வருமாறு:

மக்களுக்கான தனது செயற்பாடுகளால் இந்தியாவுக்கே வழிகாட்டக் கூடிய பெருமை மிகுந்த தலைவராக அண்ணா திகழ்ந்தார். ஆனால், அண்ணா உருவாக்கிய கட்சியையும் தமிழகத்தின் ஆட்சி அதிகா ரத்தையும் தன் குடும்பத்தின் நலனுக்காக முதல்வர் கருணாநிதி பயன்படுத்திக் கொண்டார்.

தமிழ்நாட்டின் வாழ்வாதாரமான நதி நீர்ப் பிரச்சினைகளில் மாநிலத்தின் உரிமையைக் காக்க தி.மு.க. அரசு தவறிவிட்டது. சட்டம் - ஒழுங்கு பெருமளவு சீர்கேடு அடைந்துள்ளன. தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படுகொலைகள் மாநிலத்தில் நடந்துள்ளன.

தி.மு.கவுடன் தொடர்புடைய 2-ஜி அலைக்கற்றை ஊழல் உலக அளவில் பேசப்படும் மாபெரும் ஊழலாக உள்ளது. இந்த ஊழலின் பாதிப்புப் பற்றி கிராமப்புற மக்கள் கூடப் பேசுகிறார்கள். ஆனால் இலவசங்களாலும் பணம் கொடுத்து வாக்காளர்களை ஏமாற்றியும் வெற்றி பெற்று விடலாம் என்று தி.மு.க. கருதுகிறது.

எனினும் தி.மு.க. ஆட்சியின் மீது மக்கள் கடுமையான வெறுப்பில் உள்ளனர். எனவே, எவ்வளவு பணம் கொடுத்தாலும் வரும் தேர்தலில் தி.மு.க. - காங்கிரஸ் அணி படுதோல்வி அடைவது உறுதி. அ.தி.மு.க. அணிக்கு மாபெரும் வெற்றி கிடைக்கும். அ.தி.மு.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்பதே எங்கள் கட்சியின் கணிப்பாகும்.

அ.தி.மு.க. கூட்டணியில் எந்தெந்தக் கட்சிகளை சேர்ப்பது, எந்தக் கட்சிக்கு எத்தனை தொகுதிகளை ஒதுக்குவது என்பதை கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் அ.தி.மு.க. முடிவு செய்யும். -இப்படி அவர் தெரிவித்தார்.

## உண்ணாவிரதம்......



மாணவர் நலனுக்காக: ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில், முன்னாள் காங்கிரஸ் எம்.பி ஜெகன்மோகன்ரெட்டி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் உரிய நிதி ஒதுக்கீடு செய்யக்கோரி ஒரு வாரம் உண்ணாவிரதப்போராட்டத்தை கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கி வைக்கிறார்.

# ஏழை நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்காக இந்திய அரசு 2, 250 கோடி கடனாக வழங்கவுள்ளது

டில்லி,பெப்.21

ஏழை நாடுகளுக்கு வழங்கப்படும் உதவி தொடர்ந்து வழங்கப்படும். அத்துடன் அந்த நாடுகளுக்காக சிறப்பு நிதி ஒன்று உருவாக்கப்படும். மற்றும் அந்தநாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்காக 2,250 கோடி ரூபா கடன் வழங்கப்படும்' என, இந்திய அரசு அறிவித்துள்ளது.

ஏழை நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு டில்லியில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது. இரண்டு நாள்கள் நடக்கும் இந்த மாநாட்டில் 48 ஏழை நாடுகளில், 35 நாடுகளின் அமைச்சர்கள் பங்கேற்றனர். அத்துடன் நியூயோர்க்கில் உள்ள ஏழை நாடுகளின் நிரந்தர பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.




இவர்களை விட பின்லாந்து, அவுஸ்திரேலியா, சுலோவேனியா, சீனா, ஹங்கேரி, குரோசியா, ஜோர்ஜியா, ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளின் பிரதிநிதிகளும் பார்வையாளர்களாகப் பங்கேற்றனர்.

மாநாட்டில் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா கூறியதாவது:

கடந்த 1970 இல், ஏழை நாடுகள் பட்டியலில் 25 நாடுகள் இருந்தன. தற்போது அவற்றின் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்துள்ளன. ஏழை நாடுகள் அந்தஸ்தில் இருந்து இதுவரை மூன்று நாடுகள் மட்டுமே முன்னேற்றம் கண்டுள்ளன. அந்தப் பட்டியலில் இருந்து வெளியே வந்துள்ளன. ஏழை நாடுகள் முன்னேற்றம் காண போர்க்கால அடிப்படையில் பணியாற்ற வேண்டும். அந்த நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டும். ஏழை நாடு கள் முன்னேற்றம் காணாமல், உலகளவில் சரிசமமான வளர்ச்சி மற்றும் செழுமையை காண முடியாது. ஏழை நாடுகளுக்கு உதவுவதற்காக, 22.5 கோடி ரூபாயுடன் முதலில் சிறப்பு நிதி ஒன்று அடுத்த ஐந்து ஆண்டுகளில் உருவாக்கப்படும். ஏழை நாடுகளின் வளர்ச்சி திட்டங்களுக்காக 2,250 கோடி ரூபா கடன் வழங்கப்படும்.

அதேநேரத்தில், ஏழை நாடுகளுக்கு தற்போது வழங்கப்படும் உதவிகள் தொடரும். இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஏழை நாடுகளுக்கும் மேலும் ஐந்து வகையான உதவித் தொகை வழங்கப்படும்.

உலகில் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா, அடிப்படையான மனித உரிமைகள் மற்றும் தனிமனித சுதந்திரத்திற்கு ஆதரவு அளித்து வருகிறது. ஏழை நாடுகள் தங்களின் மேம்பாட்டிற்கு இந்தியாவின் அனுபவத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு கிருஷ்ணா கூறினார்.


யாழ். நகரில் உதயமாகின்றது
EUT
தரத்தின் சின்னம்
E U T
திறப்பு விழா அழைப்பிதழ்
இன்று 21.02.2011 முற்பகல் 10.30 மணிக்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி
ஆணையாளர் திருமதி.மதுமதி வசந்தகுமார் அவர்களால் திறந்து வைக்கப்படும்
அத்தருணம் எமது கிளை நிறுவன முகாமையாளர்கள், ஊழியர்கள்
வாடிக்கையாளர்கள், அன்புள்ளம் கொண்டவர்கள் அனைவரையும்
இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி
Best Quality
Less Price
உங்கள் இல்லங்களுக்கு அழகிற்கு அழகு சேர்க்க உங்கள் எண்ணம்
போல் கைதேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களால் வடிவமைக்கப்பெற்ற
தளபாடங்களை பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்
E U T தளபாட விற்பனை நிலையம்
No.270,K.K.S Road,Jaffna
Head Office :021 224 0110

# பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு மகஜர்

திருகோணமலை,பெப்.21

அண்மையில் பெய்த அடை மழையாலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்காலும் பாதிக்கப்பட்ட புல் மோட்டைப் பிரதேச மீனவர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சங்கத்தின் தலைவரும், சமாதான நீதிவானுமான ஏ.எம்.கே. கனிபா சம்பந்தப்பட்டவர்களிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சரிடமும், மாவட்ட கடற்றொழில் விரிவாக்கப் பணிப்பாளரிடமும் அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்தப் பிரதேச மக்களில் அதிகமானோர் மீன்பிடித் தொழிலையே ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டுள்ளனர்.

வெள்ள அனர்த்தத்தால் இவர்களது மீன்பிடி உபகரணங்கள் சேதமடைந்துள்ளன. தொழிலும் பாதிப்படைந்துள்ளது என அவர் மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவர்களது தொழில் மேம்பாட்டுக்கு உரிய நிவாரண வசதி செய்துகொடுப்பதற்கு அரசு, அரச சார்பற்ற அமைப்புக்களின் அதிகாரிகள் முன்வர வேண்டும் என்றும் மகஜரில் அவர் குறிப்பிட்டுள்ளார். (204)

# கிழக்கு நீதிமன்றங்களுக்கு புதிய பதிவாளர்கள் நியமனம்

திருகோணமலை,பெப்.21

கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை, மூதூர், அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் உள்ள நீதிவான் நீதிமன்றங்களுக்கு மூன்று புதிய பதிவாளர்கள் நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றப் பதிவாளராக துறை நீலாவணையைச் சேர்ந்த சேதுபதி சந்திரசேகரமும், மூதூர் நீதிவான் நீதிமன்றப் பதிவாளராக கல்முனையைச் சேர்ந்த ஜோன். கந்தசாமியும், அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றப் பதிவாளராக அக்கரைப்பற்றைச் சேர்ந்த திருமதி பிரபா விஜயராகவனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் பணியாற்ற 125 பேர் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் இலவச வைத்திய முகாம்

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை இலவச வைத்தியமுகாம் உப்புவெளி சர்வோதய நிலையத்தில் நடைபெற்றது.

இளைஞர்களுக்கான நாளை எனும் அமைப்பினால் சர்வோதய அமைப்பு, லியோ கழகம், லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் வைத்திய முகாமின் இணைப்பாளர் பொறுப்பை திருகோணமலைத் தலைமையகப் பொலிஸ் நிலையம் ஏற்றுள்ளது.

கண் பரிசோதனை முகாம், நடமாடும் பற்சிகிச்சை முகாம், இருதய வைத்திய சிகிச்சை, நீரிழிவு நோய், உயர் குருதி அமுக்கம், கொலஸ்ரோல் என்பவற்றுக்கான வைத்திய சிகிச்சை உட்பட சகலவித பரிசோதனைகளுக்கான ஆய்வு கூட வசதிகள் போன்ற சிகிச்சைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

# ஜமாலியா முஸ்லிம் மையவாடி புனரமைப்புக்காக நிதியுதவி

திருகோணமலை,பெப்.21

ஜமாலியா முஸ்லிம் மையவாடி புனரமைப்புக்காக 70,000 ரூபா நிதி ஜமாலியா பள்ளி பரிபாலன சபையினரிடம் கடந்த வியாழக்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நகரசபையில் போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் என்.எம்.மௌசூமின் வேண்டுகோளுக்கிணங்க திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ்.தௌபீக்கினால் இந்த நிதி வழங்கப்பட்டது.

புனரமைப்புப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. (204)

# திருமலையில் சுவர் இடிந்து வீழ்ந்ததால் கடற்படைச் சிப்பாய் ஒருவர் பலி

திருகோணமலை, பெப்.21

திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் கடற்படை பயிற்சி முகாமைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் பழைய சுவரொன்று இடிந்து விழுந்ததால் கடந்த வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

கிஷான் குணவர்தன என்பவரே உயிரிழந்தவர் ஆவார். 19 வயதான இவர் குருநாகலைச் சேர்ந்தவர் ஆவார். மூதூர் பதில் நீதிவான் மஹ்றூப் விசாரணைகளை மேற்கொண்டார்.

பலியான கடற்படை வீரரின் சடலம் திருமலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விசாரணையை திருகோணமலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நீரில் மூழ்கியுள்ள வீதி...



போரதீவுப்பற்றிலுள்ள பிரதான வீதி தொடர்ந்து நீரில் மூழ்கிக் காணப்படுகின்றது.
இந்த வீதியால் பொதுமக்கள் பயணிப்பதில் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். (204)

# பெண்களுக்கான சந்தை திறந்து வைக்கப்பட்டது

சுமார் 30 வருடங்களாக சாய்ந்தமருது பிரதேசத்தில் இயங்கி வந்த பெண்களுக்கான சந்தை அண்மையில் வீதி விஸ்தரிப்பு பணிகளுக்காக அகற்றப்பட்டிருந்தது.

இந்தநிலையில், அந்த சந்தை அமைந்திருந்த இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை பெண்களுக்கான புதிய சந்தை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜும் ஆ பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.சி. அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்முனை மாநகரசபையின் பிரதிமேயர் ஏ.வஹீர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (204)

# அம்பாறையில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தால் விபத்துக்கள் அதிகரிப்பு

அம்பாறை,பெப்.21

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதுடன் போக்குவரத்து நெரிசல்களும் அதிகரித்துள்ளன என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு -அம்பாறை, கல்முனை- அக்கரைப்பற்று பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படாத நிலையில் தொடர்ந்தும் அதிகரித்து வருவதானது இந்தப் பிரதேசங்களில் விபத்துக்கள் ஏற்படுவதற்குப் பிரதான காரணங்களில் ஒன்றாக அமைகின்றது.

அண்மையில் கல்முனையில் பொலிஸ் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பிரதேச பாதுகாப்புத் தொடர்பான கூட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் நடந்த விபத்துக்களில் மாடுகள் கனரக வாகனங்களில் அடிபட்டு இறந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

ஏற்கனவே இவ்வாறான விடயம் தொடர்பாக மாநகர சபைகள், பிரதேச சபைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கியும், இவற்றுக்கான சட்ட நடைமுறைகளைச் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (204)

# விபத்தில் ஒருவர் படுகாயம்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹைறாத் வீதியில் முச்சக்கர வண்டி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் தடம் புரண்டதில் ஒருவர் காயப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஓட்டமாவடி பிரதேசத்தில் இருந்து வாழைச்சேனை நோக்கி வந்த முச்சக்கரவண்டி- ஹைறாத் வீதியில் வைத்து கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில் முச்சக்கர வண்டி முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் அதன் சாரதி காயப்பட்டு வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அதில் பயணித்த மற்றுமொருவர் எந்தக் காயமுமின்றி தப்பியுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (204)

# சாகாமம் குளத்துக்கு 3 லட்சம் மீன்குஞ்சுகள்

அம்பாறை,பெப்.21

திருக்கோவில் பிரதேசத்திலுள்ள சாகாமம் குளத்தில் நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் நன்மை கருதி மூன்று லட்சம் மீன்குஞ்சுகளை இடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாகாமம் நன்னீர் மீன் பிடித் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் ஒத்தாசையுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இந்த வேலைத்திட்டத்தினூடாக திருக்கோவில் பிரதேசத்திலுள்ள நன்னீர் மீன் பிடித்தொழிலாளர்களின் வாழ்வாதார நிலை உயர்வடைய உள்ளது.

இதன்டிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு லட்சம் மீன்குஞ்சுகள் குளத்தில் இடப்பட்டதுடன் அடுத்த இரு வாரத்திற்குள் மீன்குஞ்சுகளை அதிகரிக்கும் முகமாக இரண்டு லட்சம் மீன்குஞ்சுகள் இடப்படவுள்ளன.

இந்த மீன்குஞ்சுகளில் திலாப்பியா, நைலோட்டிக்கா, கொமன்கப், கிறஸ்கப், றோகு போன்ற மீன் இனங்கள் அடங்கி உள்ளன.

இந்நிகழ்வில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் அம்பாறை மாவட்ட நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் திமுது வோகாவத்த, அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களுக்கான நீர்வளங்கள் விரிவாக்கல் உத்தியோகத்தர் எஸ்.வில்லியம் மொபட் உட்பட நன்னீர் மீன் பிடித்தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

# இரணைமடுவில் இருந்து குடிதண்ணீர் அப்பாவி மக்களை ஏமாற்றும் திட்டம்

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.21

இரணைமடுக் குளத்திலிருந்து குடிதண்ணீர் வழங்குவதென்பது கிளிநொச்சியின் விவசாயத்தையும் அழித்து, குடிதண்ணீருக்காகக் காத்திருக்கின்ற யாழ்.குடாநாட்டு அப்பாவி மக்களையும் ஏமாற்றும் செயற்றிட்டம் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது -

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு குடிதண்ணீர் வழங்க ஒரு புதிய திட்டத்தை அரசு பலகோடி ரூபா செலவில் உருவாக்குவதற்கு நான் ஆட்சேபனை செய்து வருகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டம்தான் யாழ்.மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக விளங்குவதால், இந்தத் திட்டம் எவ்வாறு யாழ்.குடாநாட்டு மக்களையும், விவசாயத்தை வருமானமாகவும் வாழ்வாதாரமாகவும் கொண்ட கிளிநொச்சி மக்களையும் விமோசனப்படுத்தும்? எனவே இரு சாராரும் இதனைப்புரிந்து கொண்டு ஆதரவு வழங்குவதா? வேண்டாமா? என்பதைத் தீர்மானிக்கவேண்டும்.

இத்தகைய பெரிய தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு திட்டத்தை உருவாக்க எண்ணியவர்கள் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி கிளிநொச்சி வாழ் விவசாயிகளின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளாதது பெரும் தவறாகும்.

திருவையாறு படித்த வாலிபர் திட்டம், கிராம விஸ்தரிப்புத் திட்டம் ஆகியவற்றில் ஏறக்குறைய ஐநூறு குடும்பத்தினர் இந்தக் குளத்து நீரையே நம்பி மேட்டு நிலப் பயிர்ச்செய்கையை செய்து வருகின்றனர்.

சிறுபோகத்தில் குளத்தை அண்டிய பகுதிகளிலேயே நெற்செய்கை செய்யப்படும். இந்த நிலைமை சில அதிகாரிகளுக்கும் அரசுக்கும் தெரியாமற் போனது ஏனோ?

மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவது எமக்கு மோட்ச நிலையினை தரும். ஆனால் சிறுபோக வேளாண்மைக்கே தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கும்போது யாழ்.குடாநாட்டில் இருக்கும் அனைவருக்கும் இரணைமடுக் குளத்திலிருந்து குடிதண்ணீர் கொடுப்பதென்பது கிளிநொச்சியின் விவசாயத்தையும் அழித்து குடிதண்ணீருக்காகக் காத்திருக்கின்ற யாழ்.குடா நாட்டு அப்பாவி மக்களையும் ஏமாற்றும் செயற்றிட்டம்என்பதில் சந்தேகமில்லை.

கிளிநொச்சி விவசாயிகளின் ஆலோசனையைக் கூடப்பெறாமல் சம்பந்தப்பட்டவர்கள் ஏன் இத்தனை அவசரம் காட்டுகின்றார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. மாவிலாறு தொடங்கி நந்திக் கடல் முடியும் வரை நடந்து முடிந்த அனர்த்தங்களை நாடே அறியும். அதைத் தடுப்பதற்கு நடைமுறைச் சாத்தியமான கசப்பான உண்மைகளை நான் கடிதம் மூலம் அனைவருக்கும் தெரியப்படுத்தினேன். எவரும் எனது கருத்துக்களை அப்போது காதில் போட்டுக்கொள்ளவில்லை. விளைவு எல்லாவற்றையும் இழந்து எமது மக்கள் அநாதரவாக நிற்கின்றார்கள்.

அதேபோல்தான் இதுவும் ஒரு கசப்பான உண்மை. சம்பந்தப்பட்டவர்களது காதில் ஏறினால் நல்லது இல்லையேல் நான் சொல்லவேண்டியதைச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் சொல்லி விட்டேன் என்ற ஆத்ம திருப்தியில் இருப்பேன். ஏற்கனவே நான் ஊதிய சங்கு எவர் காதுக்கும் கேட்கவில்லை. இது என்றாலும் கேட்குமா? என்று பார்ப்போம் என்றார் சங்கரி.

## மனித உரிமை பாதுகாவலர் பயிற்சிநெறி
## இளைஞர்,யுவதிகள் விண்ணப்பிக்கலாம்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்த மற்றும் மீள் குடியேறிய இளைஞர், யுவதிகளிடமிருந்து மனித உரிமைகள் பாதுகாவலர்-2011 பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்ளக இடம் பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்புக்கும் நிரந்தரத் தீர்வுக்குமான செயற்றிட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு ஒருமாதத்தில் 4முழு நாள்கள் கோட்பாடு செயன்முறை ரீதியான மனித உரிமைகள் பயிற்சிநெறி வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிக் காலத்திலும் அதன் பின்னரும் தமது பிரதேசத்தில் மக்களினது மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் சமூகப் பொறுப்பையும், தலைமைத்துவத்தையும் பொறுப்பேற்பவர்களாக இருக்க வேண்டும் என்றும் அதே நேரம் தன்னார்வ சமூக பாதுகாவலராக இருக்கும் தகுதியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்பவர்கள் ஊக்கமுள்ள இளைஞர், யுவதிகளாக இருப்பதோடு சமாதான முறையில் தனியாகவும்,கூட்டாகவும் மற்றும் செயற்றிட்டத்துடனும் இணைந்தும் மனித உரிமைகள் ஊடாக சமூக மாற்றத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் அந்தப் பத்திரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

**அபிவிருத்தி...**



கிளிநொச்சி கணேசபுரம் செல்லும் பிரதான வீதியின் 180 மீற்றர் பகுதி கொங்கிறீட் இடப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதுவே கிளிநொச்சியில் கொங்கிறீட் இட்டு புனரமைக்கப்படுகின்ற முதல் வீதியாகும். (06)

## கற்சிலைமடு மக்களுக்கு மீண்டும் நிவாரணம் வழங்குக

### அதிகாரிகளிடம் வேண்டுகோள்

முல்லைத்தீவு,பெப்.21

போரினால் இடம்பெயர்ந்து மீண்டும் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியேறிய கற்சிலைமடு மக்களுக்கு அரசு வழங்கி வந்த நிவாரணம் தற்போது நிறுத்தப்பட்ட பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

போரினால் வருமானம் தரக்கூடிய கால்நடைகளை இழந்தும், தென்னை, பலா, வாழை போன்ற பயன்தரும் மரங்களை இழந்தும் எதுவித வருமானமும் அற்றநிலையில் குடியேற்றப்பட்டதாகவும் இவ்வேளையில் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் சில உணவு அல்லாத பொருள்களை வழங்கியதாகவும் தெரிவிக்கின்றன.

போரினால் பல சொத்துக்களை இழந்த இந்தப் பகுதி மக்கள் அனைத்துச் சொத்துக்களையும் ஈட்டுவதற்கு பல வருடங்கள் ஆகும் என்றும் தற்போது எதுவித தொழிலும் இல்லாத நிலையில் எப்படி வருமானத்தை ஈட்ட முடியும் என்று கேள்வி எழுப்புகின்றனர்.

இந்தப் பகுதியில் மீளக்குடியேறியபோது அரச சார்பற்ற நிறுவனங்கள் குடில் அமைக்கத் தறப்பாள் தந்து, உணவு சமைக்கப் பாத்திரம் தந்து, குடிதண்ணீர் எடுக்கும் கிணறுகளை வளவுகளை துப்புரவு செய்து மலசல கூட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது என்று தெரிவிக்கின்றனர்.

ஆனால் எங்களின் அன்றாட வாழ்வின் நகர்வுக்கு ஒரு நிரந்தரத் தொழில் இல்லாமல் கஷ்டப்படுவதால் நிவாரணத்தை மீண்டும் வழங்கி மக்களுக்குத் தொழிலுக்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்குமாறும் இந்தப்பகுதி மக்கள் வேண்டிநிற்கின்றனர்.

## அறுவடை இயந்திரம் ரூ.16 லட்சம்!

கிளிநொச்சி,பெப்.21

இலங்கை வங்கியின் மல்லாவி விரிவாக்கல் கிளையினரால் மல்லாவியைச் சேர்ந்த பயனாளி கே.செல்வகுமாருக்கு 16 லட்சம் பெறுமதியான நெல் அறுவடை இயந்திரம் வழங்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை 14 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 1 லட்சம் பெறுமதியான நெல் அறுவடை இயந்திரம் வழங்கியதாக தவறுதலாகப் பிரசுரமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (313)

## அடிப்படை வசதிகளின்றி இருக்கும் சமளங்குளம் கிராம மக்கள்

கிளிநொச்சி,பெப்.21

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் காதலியார் சமளங்குளம் கிராம மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமத்தில் மொத்தம் 74 குடும்பங்களைக் கொண்ட 231 பேர் வசித்து வருவதாகவும் இதில் 66 குடும்பங்கள வறுமை நிலையில் உள்ளனர் எனவும் 13 விதவைக் குடும்பங்கள், பல அங்கவீனமுற்றோர்களும் எனப் பலதரப்பட்டோர் மீள்குடியேறி உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தால் அழிவடைந்த எமது கிராமத்தில் பலதேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளது.

பொதுநோக்கு மண்டபம் சேதமடைந்து காணப்படுவதாகவும் வீதிகள் செப்பனிடப்படவில்லை எனவும் குளங்கள் புனரமைக்கப்படவில்லை, யுத்தத்தின்போது அழிக்கப்பட்ட அணைகள்,கட்டப்படவில்லை பாடசாலைக்கான உபகரணங்கள் வழங்கப்படவில்லை, ஆரம்ப சுகாதார நிலையம், பல நோக்குக்கூட்டுறவுச் சங்கக் கிளை, நூல் நிலையம், சந்தை, பாட சாலைக்கான கணினி வசதி, முன்பள்ளிகள் புனரமைத்தல் போன்ற அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளன எனப் பலவாறு விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராம மக்களின் முக்கியமான தொழிலான மேட்டு நிலப் பயிர்ச்செய்கை யுத்தத்தினால் அழிவடைந்துள்ளது. மீண்டும் புதிதாக மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

எமது அடிப்படை வாழ்வாதாரத்துக்கான செயற்பாடுகள் முன்னெடுப்பதற்கு இந்தக் கிராமத்தின் தேவைகளை அரசோ அன்றி தொண்டு நிறுவனங்களோ கவனித்து படிப்படியாகவேனும் நிறைவேற்றித் தரும்படியும் அத்துடன் குடிதண்ணீர்க் கிணறுகளை புனரமைத்துத் தருவதுடன் சிறார்களின் பாடசாலைத் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும் எனவும் அந்தமக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கை விடுக்கின்றனர். (500)

### நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம் பரவி வருவதால்

# ஹோட்டல்கள், வர்த்தக நிலையங்கள் சண்டிலிப்பாயில் திடீர் சோதனை

சண்டிலிப்பாய்,பெப்.21

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்கள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து உணவு கையாளும் நிலையங்கள் உட்பட பேக்கறிகள், தனியார் வர்த்தக நிலையங்கள் ஆகியன சுகாதாரப் பரிசோதகர்களின் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைத் தொடர்ந்து தற்பொழுது பல இடங்களில் புதுப்புது உணவு கையாளும் நிலையங்களும் வர்த்தக நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. சுகாதார விதி முறைகளைப் பின்பற்றாமல் வியாபார நோக்குடன் மட்டும் சில நிலையங்கள் இயங்கி வருவதால் தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. இதைக் கவனத்திற் கொண்ட சுகாதாரப் பரிசோதகர்கள், வர்த்தக நிலையங்களைச் சோதனை செய்வதில் ஈடுபட்டு வருகிறார்கள்.

சண்டிலிப்பாய் பிரதேச சுகாதாரப் பிரிவினர் இப்பிரதேசத்தில் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது சுகாதார விதி முறைகளை மீறி இயங்கி வந்த மூன்று உணவு கையாளும் நிலையங்கள் அகப்பட்டுக் கொண்டன.

இந்த மூன்று நிலையங்களின் உரிமையாளர்கள் மீது சுகாதாரப் பரிசோதகர்களால் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மூவருக்கும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஒ-115)

# இராமாவில் நலன்புரி முகாமும் செல்வோரைப் பதியும் நடைமுறை

தென்மராட்சி, பெப்.21.

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்திற்குச் செல்வோரைப் பதிவு செய்யும் பணிகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளோர் வெளியே சென்று வர அனுமதி வழங்ககப்பட்டதையடுத்து பதிவுகள் மேற்கொள்வது நிறுத்தப்பட்டது.

கடந்த இரண்டு வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்த பதிவுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது குறித்து மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

நலன்புரி நிலையப் பாதுகாப்புக்கென அண்மையில் பொறுப் பேற்றுவர்களால் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் நிலையத்திற்கு வரும் அரச உத்தியோகத்தர்களும் முன்னரங்க காவலரணில் பதிவு செய்தே உள்ளே வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# கைதடி - கோப்பாய் வீதி அரைகுறையாகப் புனரமைப்பு

நாவற்குழி, பெப். 21

கைதடி - கோப்பாய் வீதியின் திருத்தப் பணிகள் அரைகுறை வேலையுடன் கைவிடப்பட்டுள்ளது. கைதடிச்சந்தி முதல் கோப்பாய் பாலம்வரை உள்ள வீதியில் பெரிய கிடங்குகள் நிரவி தார் ஊற்றப்பட்டுள்ளது.

அதேபோல் சிறிய குழிகளும் கணிசமான அளவு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அங்கொன்றும் இங்கொன்றுமாக குழிகள் உள்ளன.

பாலத்துக்கு மேற்குப் புறமாக உள்ள வீதியில் காணப்பட்ட குண்டும் குழிகளும் புனரமைக்கப்படவில்லை. இந்த வீதியால் நாளாந்தம் 12 சில்லுகள் உள்ள கனரக வாகனங்கள் பெரும் சுமையுடன் தென்பகுதி நோக்கியும் யாழ்ப்பாணம் நோக்கியும் பயணிக்கின்றன. இதனால் வீதியின் நிலைமை மேலும் மோசமாகி வருகிறது. (ஒ-ஐ-121)

# பாம்பு கடித்த இருவர் ஆஸ்பத்திரியில்

பாம்புகளினால் கடியுண்ட மேலும் இருவர் கடந்த 17ஆம் திகதி சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கொடிகாமம் பாலாவி தெற்கைச் சேர்ந்த கனகலிங்கம் நிதுஷன் (வயது 15) பூநகரி, நான்காம் கட்டையைச் சேர்ந்த மாயச்சந்திரன் யசோதாதேவி (வயது 35) ஆகியோரே பாம்புகளினால் கடியுண்டவர்களாவர்.

கடந்த ஒரு வாரத்தில் ஒன்பது பேர் பாம்புகளினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டமையும், இவர்கள் பூநகரி, கிளிநொச்சி, பளை, வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த - 319)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்து

நெல்லியடி, பெப்.21

வடமராட்சி, கிழக்கு - அம்பன் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் நாளை திங்கட்கிழமை முதல் 23 ஆம் திகதி புதன் கிழமைவரை நோய்த் தடுப்பு மருந்தேற்றும் பணி இடம் பெறும் என நெல்லியடி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளா. நாளை திங்கட்கிழமை குடத்தனை மேற்கு, வரிக்கண்டி, மணற்காடு இடைத்தங்கல் முகாமிலும், நாளை மறுதினம் குடத்தனை கிழக்கு மடுமாதா கோயிலடி, குடத்தனை கிழக்கு கிராம அலுவலர் பணிமனை, குடத்தனை உப தபால்நிலையம், மாளிகைத்திடல் பொது மண்டபம் ஆகிய இடங்களிலும் 23ஆம் திகதி புதன்கிழமை அம்பன் கிழக்கு, அம்பன் மத்தி, அம்பன்மேற்கு பகுதிகளிலும், இந்தப் பணி இடம் பெறவுள்ளது.

### பாதையை விட்டு விலகியதால் வந்தது வினை...



நாவற்குழி பாலத்தருகே நேற்ற 'ஹைஏஸ்' வாகனம் விபத்துக்குள்ளாகியது. வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்தது ஹைஏஸ். அதிர்ஷ்ட வசமாக விபரீதம் ஏற்படவில்லை.

## வேகமாக வந்த வான் பள்ளத்தில் வீழ்ந்தது: தாயும் மகளும் காயம்

வேகமாக வந்து கொண்டிருந்த 'ஹைஏஸ்' வாகனம் கட்டுப்பாட்டையிழந்து பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த தாயும் மகளும் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 6.25 மணியளவில் நாவற்குழி பாலத்துக்கருகே இடம்பெற்றுள்ளது.

விசுவமடுவில் இருக்கின்ற தமது உறவினர் வீட்டுக்குச் சென்று விட்டு அங்கிருந்து யாழ். நகருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த வேளையே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் யாழ். முத்திரைச் சந்தியைச் சேர்ந்த திருமதி கணேஸ் ரஜனி (வயது 38) அவரது மகளான செல்வி கணேஸ் நிஷானி (வயது 14) ஆகிய இருவருமே இவ்வாறு காயம் அடைந்தவர்களாவர்.

# பிரதேச சமூகசேவைப் பிரிவினரால் தென்மராட்சியில் நலத் திட்டங்கள்

தென்மராட்சி, பெப்.21

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் கடந்த வருடம் பிரதேசத்தில் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மத்திய சமூக சேவைகள் திணைக்களமும் வடக்கு மாகாண சமூக திணைக்களமும் மக் களின் மேம்பாட்டிற்கு பல வழிகளில் வழங்கிய நலத்திட்டங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் 889 பேர் பொதுசன மாதாந்த உதவிப் பண திட்டத்தில் இணைக்கப்பட்டு மொத்தம் 3 ஆயிரத்து 943 பேருக்கு மாதாந்தம் உதவிப் பணம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கியுள்ளனர்.

பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோரில் 8 பயனாளிகளுக்கு சுயதொழில் மேற்கொள்ள தலா 15ஆயிரம் ரூபா வீதம் நன்கொடையாக வழங்கப்பட்டது. பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் காற்று போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளை மீளப்புனரமைப்பதற்கு பத்து பயனாளிகளுக்கு இரு கட்டங்களாகத் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள அல்லது ஊனமுற்ற அல்லது குடும்ப உழைப்பாளரை இழந்த ஐந்து குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இதேவேளை மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் பிரதேசத்தைச் சேர்ந்த 14 குடும்பங்களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கியுள்ளனர். இவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள அல்லது ஊனமுற்ற அல்லது குடும்ப உழைப்பாளர்களை இழந்த அல்லது அதிக குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

மாணவர்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய திட்டத்தின் கீழ் 16 குடும்பங்களுக்குத் துவிச்சக்கரவண்டிகள் கொள்வனவு செய்ய தலா 6 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டன.

பிரதேசத்தில் உள்ள ஊனமுற்ற குடும்பங்களின் வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் நான்கு குடும்பங்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வீதமும் இவர்களின் அவசர மருத்துவத் தேவைகளுக்கென 22 பயனாளிகளுக்குத் தலா ஆயிரத்து 500 ரூபா வீதமும் உதவிகள் வழங்கப்பட்டன.

பிரதேசத்தில் உள்ள ஊனமுற்றவர்களில் 7 பேருக்கு முச்சக்கர வண்டிகளையும், 3 பேருக்கு சக்கர நாற்காலிகளையும் ஒருவருக்கு மூக்குக் கண்ணாடிகளையும், 22பேருக்கு செயற்கை கால்களையும், ஒருவருக்கு காது கேட்கும் கருவியையும் 276 முதியவர்களுக்கு அடையாள அட்டைகளையும், வழங்கியுள்ளனர்.

மத்திய சமூக சேவைகள் திணைக்களத்தினர் பிரதேசத்தில் உள்ள 12 ஊனமுற்றவர்களுக்குச் சுயதொழில் உதவியாகத் தலா 10 ஆயிரம் ரூபா வீதமும், தாய் அல்லது தந்தையை இழந்த குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சியில் ஈடுபட 12 பயனாளிகளுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கியதுடன் ஊனமுற்ற ஏழு பேருக்குத் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவாக வழங்கிவருகிறது.

மேலும் கடந்த வருடம் எற்பட்ட வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு நலன்புரி நிலையத்தில் வைத்து சமைத்த உணவு வழங்கப்பட்டன. கடந்த வருடம் கைதடி நபீல்ட் பாடசாலைக்குப் பரிணாம நன்கொடை நிதியாக 7 லட்சத்து 47 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் சு. வரதபாஸ்கரன் தெரிவித்தார். (த-207)

# திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்



BOASCO

ஆயிரங்காலத்துப் பயிர்!
இங்கேயே துளிர்க்கட்டும்!

போஸ்கோ (யாழ். நல்லூர் கோயில் முன்பாக)
No. 610/3(252), Point Pedro Road, Nallur, Jaffna.
Tel: 021 222 0370, E-mail: boasco09@yahoo.com



## எந்த முதலீடும் இல்லாமல் மாதம் ரூபா 50,000/= க்கு மேல் சம்பாதிக்க ஆசையா.....?? !!!!



யாழ் குடாநாட்டு இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இணையத்தளம் மூலம் மாதம் ரூபா 50,000/= மேல் வீட்டிலிருந்தபடியே சம்பாதிப்பதற்கு ஓர் இலகு வழிகாட்டல் வகுப்பு

இல்லத்தரசிகளே நீங்களும் உங்கள் குடும்பத்தை முன்னேற்ற நினைக்கிறீர்களா????ஆனால் என்ன வேலை செய்வது. என்று தெரியவில்லை???? முதலீடு இல்லை மற்றும் குழந்தைகளை விட்டு வெளியே சென்று வேலை செய்ய யோசிக்கிறீர்களா? கவலையை விடுங்கள் உங்கள் வீட்டிலிருந்தபடியே மாதம் ரூபா 50,000/=மேல் சம்பாதித்துக் கொள்ளுங்கள்

உங்களிடம் இருக்க வேண்டியது ஓர் கணினியும் இணைய வசதியும் மட்டுமே.

குறிப்பு : கணினி பற்றி அறிவில்லாதவர்களும் பயப்படாமல் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.
வகுப்பு நடைபெறும் நாள் 26,27 திகதிகளில் மாலை 2.30 - 6.00
மேலதிக விபரங்களுக்கு 0779235804,0215675916
பயிற்சி கட்டணம் 3250/= மட்டுமே
பதிவுக்கட்டணம் எதுவுமில்லை





## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்
1270 சிகப்பு
தனுசு
19 36 39 42
18-02-2011
ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 242,505 | 20/- | 4,850,100/- |
| 2 இலக்கங்கள் | 22,272 | 40/- | 890,880/- |
| 1 இல. + லக்கினம் | 21,951 | 60/- | 1,317,060/- |
| 2 இல. + லக்கினம் | 1,999 | 200/- | 399,800/- |
| 3 இலக்கங்கள் | 594 | 1000/- | 594,000/- |
| 3 இல. + லக்கினம் | 57 | 10,000/- | 570,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,000,000/- | 2,000,000/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 11,021,840/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 649 | | 823,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 290,030 | | 11,844,840/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்
மேடம்
02 06 28 34
ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 646 | 500/- | 323,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| [illegible] இல. + லக்கினம் | 1 | 300,000/- | 300,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 649 | | 823,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-


## மாணவர், விதவைகளுக்கு உதவிகள் வழங்கல்

தென்மராட்சி, பெப்.21

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 32ஆவது வருடாந்தப் பொதுக்கூட்ட நிகழ்வில் மாணவர்கள், விதவைகளுக்கு உதவிகள் வழங்கப் பட்டன.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற் றது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத் தைச் சேர்ந்த தந்தையை இழந்த 10 மாணவ, மாணவிகளுக்கு சைக்கிள்க ளும் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 26 மாணவர்களுக்கு கல்வி அபிவிருத்தி நிதியும், இரண்டு விதவை கள், இரண்டு ஊனமுற்றோர் ஆகியோ ருக்கான உதவித் தொகைகளும் கைய ளிக்கப்பட்டன.

மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்தி ரகுமார், தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், 523ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடி யர் தெமட்டம்பிட்டிய, நகரசபைச் செய லாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல் உட்ப டப் பலர் கலந்துகொண்டு உரையாற் றினர்.

மன்றத்தைச் சேர்ந்த மேலும் நான்கு வர்த்தகர்கள் கல்வி நிதியத்திற்கென நிதி உதவியினை நிகழ்வில் வழங்கினர்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் ஆங்கில பாட தொண்டராசிரியராக கட மையாற்றும் ஆசிரியைக்கு மன்றத்தி னால் மாதாந்த வேதனமும் வழங்கப் பட்டது. (ம-207)


**மணமகள் தேவை**
யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அரச ஆயுர்வேத மருத்துவமனையில் வைத்தியராகப் பணிபுரியும் 1977ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு இலங்கையில் படித்த தொழில் புரியும் மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு: 021 2255130 (608)



# UK STUDENT VISA

★ IELTS: Not Necessary
★ College Admission arranged
★ Bank Sponsors arranged
★ 100% Visa Success

SIC CENTER
734, Hospital Road, Jaffna.
Tel: 0776209887/ 0777767818
(109648)



## சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்

பின்வரும் பதவிகளுக்குச் சங்க எல்லைப்பரப்பில் வசிக்கும் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பயிற்சிக் கிளை முகாமையாளர்கள்**
1.தகைமை
கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (சாதாரணம்)/ இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ தூய கணிதம்/ வர்த்தக கணிதம், தமிழ் பாஷை ஆகிய பாடங்கள் உள்ளடக்கியதாக க.பொ.த. (சாதாரணம்) தரப் பரீட்சையில் ஆறு பாடங்களிலான சித்தி.
2. வயது: 18- 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. வேதனம்: நாள் ஒன்றுக்கு ரூ.300/=

**02. உற்பத்திப் பயிற்சியாளர்கள்**
ஜசுபி பழரசத் தொழிற்சாலையின் உற்பத்திக்கு பயிற்சியா ளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.
வயது: 18-45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தங்கள் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை பொதுமுகாமையாளர், சுன்னாகம் பல நோக்குக் கூட்டு றவுச் சங்கம் (வ-து) சுன்னாகம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ 07.03.2011இற்கு முன்னர் கிடைக் கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

19.02.2011 (சி/576141) பொதுமுகாமையாளர்.



# 3½ வருட உத்தரவாதமான மாணவர் விசா

இன்று வெளிநாடு செல்வதில் பல தடைகள் இருந்தாலும் எதுவித சிரமமும் இன்றி அனைத்து ஏற்பாடுகளையும் உடனடியாக செய்துகொள்ளக் கூடிய முறையில் அனைத்து வித செலவுகளையும் Visa கிடைத்த பின் செய்துகொள்ளக் கூடிய முறையில் இயங்கும் ஒரே ஒரு நிறுவனம் எங்கள் நிறுவனமாகும்.

1. எம்மால் குறைந்த செலவில் 3½ வருட Visa உத்தரவாதமாகப் பெற்றுத்தரப்படும்.
★ நீங்கள் எமைத் தொடர்புகொண்டு எம்மிடம் பதிவு செய்தபின் சட்டத்தரணியூடாக ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டு Visa பெறும் ஆவணங்கள் கையேற்கப்படும்.
★ College Fees, Sponsor Fees தூதரக Visa கட்டணம், தேவையான ஆவணங்களுக்குரிய கட்டணம், சேவைக் கட்டணம் (Consulting Fees) என்பன முற்றிலும் Ani international Education Consultant Service இனால் செலுத்தப்பட்டு, Visa உங்கள் கையில் கிடைத்த பின்னரே, நீங்கள் பணம் செலுத்தும் வசதி செய்து தரும் ஒரே நிறுவனம்.

எம் நிறுவனத்தின் நேரான வழிகாட்டலில் 3½ வருட Visa பெற்றுக்கொண்டவர்களின் விவரம்


இரத்தினம் பிரகாஷ்
அளவெட்டி
021 2240563, 0775937698


தியாகராஜா துஷ்யந்தன்
கரவெட்டி
021 4904909, 0772844325


செல்வரட்ணம் யுவராஜ்
சுன்னாகம்
021 3213839, 0750414749


தவலக்ஷமி தவபாலன்
நல்லூர்
021 2223147, 0777171470


செலின் அழகரட்ணம்
யாழ்ப்பாணம்
0772626813


சண்முகராஜா திலகரஞ்சன்
கோப்பாய்
021 3007151, 0779789278


மகேந்திரன் நிஷாலினி
(கிளிநொச்சி) திருகோணமலை
026 2224721, 0776281698

UK Boarder Agency இன் இறுக்கமான கட்டுப்பாடுகள் 30.04.2011 இல் அமுலாவதால் அதற்கு முன்னரே UK பயணமாவதற்குரிய அரிய சந்தர்ப்பம்!!
இன்றே தொடர்புகொள்ள....
15 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த
**அனி இன்டர்நேஷனல் எடியுகேஷன் கன்சல்டன்ட் சர்விஸ்**
269/3, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
Tel: 021 4921831 Tele/Fax: 021 4921832 Hot Line: 0772568122

# புனித சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை




கடல்வளங்கள் சூழப்பெற்ற எழில் கொஞ்சும் நகரமாக யாழ். நகரின் கண்டி வீதி, குருநகர் பிரதேசத்தில் கிறிஸ்தவ ஆலய வளாகத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆகும்.

யாகப்பர் கிறிஸ்தவ ஆலய வளாகத்தில் 1932 ஆம் ஆண்டு திருக்குடும்பக் கன்னியர்மட அருட்சகோதரிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்த மகளிர் பாடசாலை மிகவும் புனிதமான, மதத்துடன் சார்ந்த கல்வியை ஏழை மாணவிகளுக்கு வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் இப்பகுதியைச் சேர்ந்த ஏழை மாணவிகள் அதிகதூரம் கடந்து வேறு பாடசாலைகளுக்குச் சென்று கற்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இப்பிரதேசத்தின் மிக அருகில் இப்பாடசாலை அமைந்துள்ளமை யால் அதிகமான மாணவிகள் இப் பாடசாலையிலேயே கல்வி பயிலுகின்றார்கள்.

பாடசாலையின் ஆரம்ப அதிபராக அருட்சகோதரி அகத்தா பொறுப்பேற்று பாடசாலை நிர்வாகத்தைத் திறம்பட நடத்தினார். அருட்சகோதரிகளின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இப்பாடசாலை மாணவிகளின் இறைசார்ந்த நல்லொழுக்கத்துக்கும் உறுதுணையாகவுள்ளது.

ஆரம்பத்தில் 100 இற்கு குறைவான மாணவர்களே இப்பாடசாலையில் கல்விகற்றனர். குருநகர்ப் பிரதேசத்தில் கடற்றொழிலினைப் பிரதான தொழிலாகக் கொண்ட குடும்பங்கள்தான் அதிகம். இதனால் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு இவர்களது வருமானம் போதுமானதாக இருக்கவில்லை. ஏழை மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் இப்பாடசாலை இவ்வாறான குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் கற்றலுக்குப் பொருத்தமான பாடசாலையாக விளங்குகின்றது.

யாகப்பர் ஆலயத் தரிசனத்துக்குச் செல்லும் மக்கள் தமது மனதில் உள்ள பிரச்சினைகளை இறைவனிடமும் அருட்சகோதரிகளிடமும் முறையிட்டார்கள். இவர்களது கருணை உள்ளங்களால் ஏழைமக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன. பிள்ளைகளின் கல்விக்கும் ஒரு வெளிச்சம் கிடைத்தது.

பாடசாலை நிர்வாகக் கட்டமைப்புகளுக்கு அமைவாக ஆலய வளாகத்தில் பெண்கள் பாடசாலையும்,6ஆம் குறுக்குத் தெருவில் பெண்கள் பாடசாலையுடன் சேர்ந்த சிறு வீதியைக் கடந்து ஆண்கள் பாடசாலையும் ஸ்தாபிக்கப்பட்டன. பாடசாலையில் மாணவர்களின் தொகை அதிகரிப்பினால் ஆரம்ப காலத்தில் சிறுகட்டடங்களாக இருந்த பாடசாலையின் கட்டடங்கள் 1952ஆம் ஆண்டு சென். ஜேம்ஸ் வித்தியாலயமாக உருவாக்கம் பெற்றது.

1979 ஆம் ஆண்டுதான் முற்றுமுழுதாக அருட்சகோதரிகளே பொறுப்பேற்றுக் கொண்டனர். 1979,1981ஆம் ஆண்டுகளில் மாணவர்தொகை 685ஆக உயர்வடைந்து சென்றது.

மாணவர்தொகை அதிகரிக்க அதிகரிக்கப் பாடசாலையில் கல்வியும் உயர்வடைய ஆரம்பித்தது. திறமைமிக்க ஆசிரியர்கள் திருக்குடும்ப கன்னியர் மட அருட்சகோதரிகள், அதிபர்களாகப் பொறுப்பேற்றுத் திறமைமிக்க மாணவர்களைச் சமூகத்துக்கு அடையாளம் காட்டினார்கள்.

இதனால் குருநகர்ப் பிரதேச மக்கள் மத்தியில் இப்பாடசாலையின் மீது தனி ஆர்வம் ஏற்பட்டது. இதன் காரணமாக இப்பகுதி மக்கள் தமது பிள்ளைகளை இப்பாடசாலையில் சேர்க்க ஆர்வம் காட்டினார்கள். இப்பாடசாலையின் வளர்ச்சிப் பாதைக்கு அருட்சகோதரிகளின் சேவையும் பெற்றோர்களின் ஆர்வமும் உந்துதலாக அமைந்தது.

1989 ஆம் ஆண்டு தங்கராஜா அதிபராக இருந்த காலத்தில் பாடசாலையின் நிர்வாகம் யாகப்பர் ஆலய கட்டளைக் குருவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறு மாறி மாறி ஆலய நிர்வாகமே பாடசாலையை வழிப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இப்பாடசாலை இரு பிரிவாக மாற்றப்பட்டதன் பின்னர்தான் அருட்சகோதரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.1999 ஆம் ஆண்டுதான் பாடசாலையில் உயர்தரப் பிரிவு ஆரம்பிக்கப்பட் டது.2003 ஆம் ஆண்டு மாணவர் எண்ணிக்கை 700 ஆக உயர்வடைந்தது.

மாணவர்களை ஆன்மிகத்திலும் ஒழுக்கத்திலும், கல்வியிலும் சிறந்தவர்களாக உருவாக்க திருமதி லு. மகேஸ்வரன் அதிபராகப் பொறுப்பேற்றார்.

2002 ஆம் 2003 ஆம் ஆண்டுகளில் முறையே 15,20 இற்கு மேற்பட்ட பேர்கள் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தனர். அத்துடன் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் மாணவி ஒருவர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. 2004 ஆம் ஆண்டு 5 பேர் க.பொ.த.உயர்தரம் சித்தியடைந்து 2 மாணவிகள் கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி பெற்றார்கள்.

2005 ஆம் ஆண்டு 3 பேர்

(தொடரும்)

# அருகிவரும் மாணவர்களுடன் அரியாலை ஆனந்த வித்தியாலயம்

(சென்றவாரத்தொடர்ச்சி)



அரியாலைப் பிரதேசத்தில் யாழ். கல்வி வலய எல்லைக்குள் 90 வருடங்களுக்கு மேலாக 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியான' கதையாகக் கல்விப் பணி புரிந்து வருகின்றது அரியாலை ஆனந்த வித்தியாலயம்.

காலப்போக்கில் மேல் வகுப்புக்கள் ஸ்தம்பிதமடையும் நிலை தோன்ற தரம் 5 இற்கு கீழான ஆரம்பப் பாடசாலையாக மாறியது. மாணவர்தொகை குறைவடைந்த போதும் கல்வியில் அவ்வப்போது சாதனை படைக்கத் தவறவில்லை. புலமைப்பரிசில் பரீட்சையில் 1992ஆம் ஆண்டில் 192 புள்ளிகள் பெற்ற கே.நிசாந்தி, 2005ஆம் ஆண்டில் 158 புள்ளிகள் பெற்ற ஜெ. சுஜீவ், 2008 ஆம் ஆண்டில் 114 புள்ளிகளைப் பெற்ற த.நீரஜா ஆகியோரின் பெறுபேறுகள் நோக்கத்தக்கவை.

'மடிக்குள் மருந்திருக்க மலையேறித் தேடுவது' போல் தமக்காகவே தமது சமூக உயர்வுக்காகத் தொடங்கப்பட்ட பாடசாலையைப் புறந்தள்ளி நகர்ப்புறக் கல்வி மோகத்தின் விளைவாகத் தமது பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் இணைக்கும் சமூக அக்கறையற்ற தன்மை உருவாகியதால் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறையத் தொடங்கியது.

அதேவேளை 'தகுதியற்ற ஏனைய பாடசாலைகளால் நிராகரிக்கப்பட்ட ஆசிரியர்களை பிற்காலங்களில் கல்வித் திணைக்களம் இங்கே கடமைக்கு இணைத்தமையும் பாடசாலையின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. அத்துடன் இக்கிராமத்தில் 40இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வசிக்கின்ற போதிலும் தியாகமும் அர்ப்பணிப்பும் மிக்க கல்விச் சேவையைத் தமது கிராமத்தில் தொடர பின்னடிப்பதும் பாடசாலைப் பின்னடைவின் கவலைக்குரிய விடயமாகும் என ஒரு பெரியவர் தெரிவித்தார்.

200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்ற அரியாலை ஆனந்த வித்தியாலயம் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதையாக இன்று 17 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது. அதிலும் 4மாணவர்கள் விசேட தேவையுடையவர்கள்.

நடப்புக் கல்வியாண்டில் தரம் 1இல் 3மாணவர்கள், தரம் 2இல் 1மாணவன், தரம்3இல் 5மாணவர்கள், தரம் 4இல் 3 மாணவர்கள், தரம் 5இல் 5 மாணவர்கள் என்னும் அளவில் மாணவர் தொகை காணப்படுகின்றது. இவர்களுக்குரிய தளபாடங்களுடன் ஏனைய பகுதிகளும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலும் இப்படி ஒரு கல்விக் கூடமா? என்று எண்ணத் தோன்றுகிறது. தற்போது இங்கு கற்கும் மாணவர்கள் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இருந்தாலும் தம்மை நம்பி வந்த மாணவர்களுக்குரிய கல்வியையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து சிறந்த அடைவு மட்டத்தை அடைய தற்போதைய தலைமை ஆசிரியர் ச.ரூபசிங்கம் அவர்களும் ஏனைய ஆசிரியர்களும் தமது முழுத்திறனையும் பிரயோகித்து சேவையாற்றி வருகின்றனர்.

மாணவர்களின் வசதியின்மையை கருதித் தலைமை ஆசிரியர் பல தொண்டு நிறுவனங்களை அணுகி கொப்பிகள், சப்பாத்து, புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்களைப் பெற்று வழங்கி வருகின்றார்.

''தரம் 5 இல் 5மாணவர்கள் உள்ள போதும் அவர்களை கூடுதல் கவனமெடுத்து இம்முறை புலமைப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெறக்கூடிய வகையில் தயார்ப்படுத்த எண்ணியுள்ளேன். ஏனென்றால் எமது பாடசாலையில் படிப்பவர்களும் சித்தியடைய முடியும் என்பதைப் பெற்றோருக்கு உணர்த்தும் போது, தமது பிள்ளைகளை இப்பாடசாலையில் இணைக்கும் ஆர்வத்தைக் கூட்ட முடியும்'' என்று அதிபர் தெரிவித்தார். இடமாற்றம் பெற்று அண்மையில் கடமையேற்ற இவ்வூரைச் சேர்ந்த ஆசிரியர் ம.ரஞ்சினி, ''ஒரு பாடசாலையை உருவாக்குவது மட்டுமல்ல அதைத் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் நகர்த்திச் செல்வதும் கிராம மக்களின் கைகளில் தங்கியுள்ளது. புத்திஜீவிகள் பொது அமைப்புக்கள் ஊர்ப்பற்றுள்ளவர்கள் சிந்தித்து செயலில் இறங்க வேண்டும். மாணவர் தொகையை அதிகரித்தால் தகுந்த ஆசிரியர்களையும், வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறு கல்வித்துறை அதிகாரிகளைக் கோர முடியும். நூற்றாண்டை எதிர் நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் அரியாலை ஆனந்த வித்தியாலயம் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் சுவடுகள் பதித்துச் சேவையாற்ற வழிவகைகளை மேற் கொள்ள வேண்டிய கட்டாய பொறுப்பு அனைவருக்கும் உண்டு'' எனத் தெரிவித்தார்.

யேசுதாஸ்

(முற்றும்)

# பதவி வெற்றிடங்கள்

இந்திய டாட்டா உருக்குக் கம்பனியின் 100 வீத முழு உரிமையைக் கொண்ட, உருக்குக் கம்பியைக் கல்வனைஸ்ட் செய்யும் பிரபல்யம் வாய்ந்த LINDEL Industrial Estate, சபுகஸ்கந்தவில் உள்ள- தனது தொழிற்சாலையில் கீழ்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

- ✱ இயந்திர இயக்குநர்கள் - Machine Operators
- ✱ இயந்திர இயக்குநர் பயிலுனர்கள்- Trainee Machine Operators
- ✱ இயந்திர பராமரிப்பு தொழில்நுட்பவியலாளர்கள் Mechanical Maintenance Technicians
- ✱ மின்னியலாளர்கள், பொது திருத்துனர்கள் Electricians, General Mechanics
- ✱ குழாய் பொருத்துநர்கள், ஓட்டுநர்கள், பொருத்துநர்கள் Plumbers, Welders, Fitters.
- ✱ வான் சாரதி- Van Driver

1. 35வயதுக்குட்பட்ட கடின உழைப்புடன் சுறுசுறுப் புமுள்ள பொருத்தமான தகைமையுடையவர்களை விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.
2. குறித்ததுறைகளில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. தெரிவாகும் மனுதாரர்களுக்கு பொருத்தமான தங்குமிட வசதியும் உணவும் நிறுவனத்தால் வழங்கப்படும்.

**இவ் விளம்பரம் வெளியாகி 14 நாள்களுக்குள் விண்ணப்பங்களை அனுப்பவும்.**

**கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் தொழிலைக் குறிப்பிட்டு பின் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**The Manager - HR**
**Lanka Special Steels Limited**
**No: 53A, Ward Place, Colombo- 7**

உங்கள் விண்ணப்பங்களை admin@lankassl.com எனும் ஈமெயில் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்.

## பெண்ணைத் தீண்டிய பாம்பு

தென்மராட்சி, பெப்.21

வளவுக்குள் வந்த குரங்குக் கூட்டத்தைக் கலைத்த குடும்பப் பெண் பாம்பினால் கடியுண்டார். வளவில் இருந்த கற்குவியலில் கல் எடுத்த வேளையில் பாம்பு கையில் கடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் சாவகச்சேரி மடத்தடியில் இடம் பெற்றது.

இதேஇடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி (வயது 61) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார். (ம-207)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக் கடமை புரியும் அருணாசலம் பழனிப்பழம் அவர்களின் அன்புத் தந்தை **முருகேசு அருணாசலம்** அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

**2011.02.18**

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2359

வெற்றி எழுத்து: G    வெற்றி எண்கள்: 0 6 1 4 1 4

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | G 0 6 1 4 1 4 | ரூபா.15,270,615/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 0 6 1 4 1 4 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 6 1 4 1 4 | ரூபா. 100,000/= | பரிசுகள் 15 |
| 3 பரிசுகள் | 1 4 1 4 | ரூபா. 10,000/= | பரிசுகள் 122 |
| 4 பரிசுகள் | 4 1 4 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1312 |
| 5 பரிசுகள் | 1 4 | ரூபா. 100/= | பரிசுகள் 13153 |
| 6 பரிசுகள் | 4 | ரூபா. 20/= | பரிசுகள் 130542 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு


| | | | |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 0 6 1 4 1 | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | 0 6 1 4 | ரூபா. 1,000/= | பரிசுகள் 128 |
| 9 பரிசுகள் | 0 6 1 | ரூபா. 100/= | பரிசுகள் 1299 |
| 10 பரிசுகள் | 0 6 | ரூபா. 50/= | பரிசுகள் 13061 |
| 11 பரிசுகள் | G | ரூபா. 20/= | பரிசுகள் 51921 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
**Rs. 12,047,510.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு




## அமரர் ஆசைப்பிள்ளை இரத்தினம்

கடந்த 24.01.2011 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.02.2011) திங்கட்கிழமை4 கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியகிரியைகள் எதிர்வரும் (23.02.2011) புதன்கிழமை எமது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

பத்தமேனி,
வைரவர் கோயிலடி,
அச்சுவேலி.

தொடர்பு:- 0770690358
0213218005

(சி/576138)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




## அமரர் தம்பு அருணாசலம் (செல்வராஜா)

எங்கள் பாசமான அப்பாவே
அம்மாவிற்கு ஆருயிர்த் துணையாக
ஆறுதலாக நீரிருந்தீர்
இரு கண்களாக நாமிருக்க
பாரினிலே தவிக்கவிட்டு
பறந்து சென்றீரப்பா
எம் இமைமூட மறுத்தாலும்
உங்கள் நினைவு
எம் நெஞ்சைவிட்டு அகலாதப்பா

**மனைவி,**
**பிள்ளைகள்.**

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(564)

# கோழிப் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள்



*(கடந்தவார (திங்கள்)தொடர்ச்சி)*

**கொக்சிடியோசிஸ் (Coccidioxsis)**

இந் நோய் விசேடமாக 1 தொடக்கம் 4 மாத வயதுடைய குஞ்சுகளில் பெரும்பாலும் ஏற்படுகின்றது. கொக்கிடியா ஒட்டுண்ணியில் பல இனங்கள் உண்டு. இவ் வொட்டுண்ணி கோழிகளின் உணவுக் கால்வாய்த் தொகுதியில் தங்கி வளரும்.

*இந் நோய் ஏற்பட்ட பறவைகள், குஞ்சுகள் கூதலோடியது போல் சிறகுகளை இறக்கிக் கொண்டு நிற்கும்.

*பூ வெளிறும்

*சில வேளைகளில் கழிவுடன் சேர்ந்து இரத்தம், சீதம் வெளியேறும்.

இந்த நோயைக் கட்டுப்படுத்த உயிரியல் பாதுகாப்பு முறையினைப் பின்பற்றுதல் மிக முக்கியமானது. கோழி இனம் (உ-ம் -முட்டைக்கோழி, இறைச்சிக்கோழி),வயது போன்ற வேறுபாடுகளை அவதானித்து அவற்றை வெவ்வெறு கூடுகளில் வளர்க்க வேண்டும்.

கூட்டுக்கு உட்செல்லும் இடத்தில் தொற்று நீக்கி ஒன்றை வைத்தலும் கூட்டுக்குள் செல்பவர்கள் இத் தொற்று நீக்கியால் கை, கால்களைக் கழுவி கொண்டு உட் செல்லலும் வேண்டும்.

இந் நோயைக் கட்டுப்படுத்த 10வீத அமோனியா திரவத்தினால் கூட்டைச் சுத்தம் செய்ய வேண்டும். மேலதிக சிகிச்சைக்கு பகுதிக் கால்நடை வைத்தியரை நாடவும்.

உங்களது கோழிப் பண்ணையில் கொக்சிடியோஸிஸ், றனிக்கற், கோழி அம்மை போன்ற கொடிய தொற்று நோய்கள் ஏற்படாது தடுக்க பின்வரும் வழி முறைகளைக் கையாள வேண்டும்.

*உயிரியல் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்தல்.

*கூளம் காய்ந்து சுத்தமாக இருத்தல் வேண்டும்.

*உணவு நீர்ப்பாத்திரங்கள் மிகவும் சுத்தமாகப் பேணப்படல் வேண்டும்.

**விற்றமின் குறைபாட்டு நோய்கள்**

குறிப்பாக எமது பிரதேசத்தில் பின்வரும் விற்றமின் குறைபாட்டு நோய்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

*விற்றமின் ஏ

*விற்றமின் டீ

*விற்றமின் பி

*விற்றமின் ஈ

**விற்றமின் ஏ குறைபாட்டு நோய் அறிகுறிகள்**

*இரவில் கண்தெரியாது

*முட்டை உற்பத்தி குறைவடைதல்

*முட்டை பொரிக்கும் தன்மை குறைதல்

*தசை வளர்ச்சி குன்றல்

*விரைவில் தூக்கம் (றூப் நோய்) தாக்கத்திற்கு உட்படும்.

**இக் குறைபாட்டைத் தடுக்கும் முறைகள்**

*கீரை, பொன்னாங்கண்ணி, முள் முருக்கு, சாறணை போன்ற கீரை வகைகளிலும் மீன் எண்ணெயிலும் விற்றமின் ஏ உண்டு.

இவற்றை உணவுடன் கொடுப்பின் இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யலாம்.

**2.விற்றமின் 'டீ' குறைபாட்டு நோய் அறிகுறிகள்**

*காமாலை

*உடல் வளர்ச்சி குன்றல்

*கோழிகள் நடப்பதற்குக் கஷ்டப்படுதல்

*கோழி முட்டைகளின் ஓடு மெல்லியதாக இருத்தல்.

**இக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய**

முதலில் சூரிய வெளிச்சம் கூட்டினுள் விழ வழி செய்க.

மீன் எண்ணெய் உணவுடன் கலந்து கொடுத்தல் வேண்டும்.

**விற்றமின் 'பி' குறைபாட்டு**

**ஆ.சிவானந்தன்**
*மாவட்ட அலுவலர்,*
*ஐக்கிய நாடுகள் உணவு விவசாய நிறுவனம்,*
*யாழ்ப்பாணம்.*

**அறிகுறிகள்**

விற்றமின் பி இல் பலவகை உண்டு. இதில் பி1, பி2, பி12 என்பனவே கூடிய பாதிப்பைக் காட்டும்

பி1 -குறைபாட்டினால் நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டுத் தள்ளாட்டம்.

பி2-குறைபாட்டினால் கால்கள் சொத்தியாக இடமுண்டு.

பி12- குறைபாட்டினால் குருதி உற்பத்தி குறைந்து வெளிறல்.

இந்நோயைக் கட்டுப்படுத்த பி கலவை கொடுக்கலாம் அத்துடன் தவிடு கலந்த விற்றமின் பி அடங்கிய உணவுகளைக் கொடுத்தல் நல்லது.

அவ்விடத்தில் வளர்க்கப்படக்கூடிய கோழிகளின் எண்ணிக்கையை விட அதிகமான எண்ணிக்கையில் கூடுகளில் கோழிகளை வைத்திருக்கக் கூடாது.

தொற்று நோய்கள் கூட்டில் காணப்பட்டால் கூட்டை முற்றாகச் சுத்தப்படுத்திகன கூளத்தை அகற்றி எரித்துக் கூட்டை தொற்று நீக்கம் செய்து சில நாள்கள் விட்ட பின்பே அதே கூட்டில் மீண் டும் கோழிகளைவளர்க்கவேண்டும். கூட்டைச் சுத்தம் செய்ய தொற்று நீக்கி பாவிப்பது பற்றி சரியான அறிவுரைகளைப் பெற்று முறைப்படி செய்ய வேண்டும். இல்லாவிடின் எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் போகலாம். அத்துடன் செலவு செய்த பணமும் வீண் விரயமாகலாம்.

3) நாடாப்புழு நோய்

இப்புழுத் தொற்றலை கோழிகளில் சில வேளைகளில் அவதானிக்கலாம். கோழிகளின் எச்சங்களைப் பரிசீலிக்கும் போது வெள்ளைத் துண்டங்களாக இலை தென்படும். இதற்கான சிகிச்சை கால் நடை வைத்தியரிடம் இருந்து பெற்றுக் கொள்ளவும்.

**கேப்புழு நோய்**

அசுத்தமான சூழ்நிலைகளில் வளரும் கோழிக்குஞ்சுகளில் இந் நோய் ஏற்பட வாய்ப்புண்டு. கோழிகள் எந்நேரமும் வாயைத்திறந்து கழுத்தை வெளியே நீட்டி மூச்சுவிடும். சுவாசக் குழாயில் இப் புழுக்கள் சிவப்பு மயிர் போன்று காணப்படுவதே இந்நோயின் அறிகுறியாகும். இவ்வாறான அறிகுறிகளைக் கண்டதும் கால் நடை வைத்தியரைச் சந்தித்து உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளவும்.

இக் கட்டுரையிலே நாம் இதுவரையும் வைரஸ், பக்றீரியா மற்றும் ஒட்டுண்ணிகளால் கோழிகளில் ஏற்படும் நோய்கள் அதன் சேதம் எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என ஆராய்ந்தோம். இனி இறுதியாக எமது பிரதேசத்தில் வளப்புச் செய்யப்படும் கோழிகளில் விற்றமின் கனியுப்புக் குறைபாட்டு அறிகுறிகளையும் இவற்றினால் ஏற்படும் நோய்ச் சேதங்களையும் பற்றி சற்று ஆராய்ந்து பார்க்கலாம்.

4.விற்றமின் 'ஈ' குறைபாடு

இக்குறைபாட்டுகளில் குஞ்சுகளின் நரம்புத்தொகுதி பாதிக்கப்பட்டு நாத்தளர்கீச்சியைக் காட்டும், முட்டையிடும் கோழிகளில் முட்டை உற்பத்தி குறையும்.

கனிஉப்பு குறைபாட்டு நோய்கள்

கோழிகளின் உணவில் கனியுப்பு இருப்பது அவசியம். எல்லாக் கனியுப்புக்களும் இல்லாவிடிதும் கீழ்க் காணும் மிகவும் முக்கியமான மூன்று உப்புகளும் மிக அவசியமானவை.

*கல்சியம்

*பொசுபரசு

*இரும்பு

இதற்காக எலும்புச் சாம்பலில் 25% கல்சியமும் 12% பொசுபரசும் உண்டு.

இதன் குறைபாட்டு அறிகுறிகளாக

*காமாளை

*முட்டை ஓடு மெலியதாக இருத்தல்,

*முட்டை ஓடு சவ்வு போன்றிருத்தல்

இரும்புக் குறைபாட்டினால் கோழிகளில் இரத்தச் சோகை ஏற்படும் கீரை வகைகளில் இரும்பு உண்டு. கோழிகளின் உணவில் கனியுப்புக் கலவையைத் தினமும் கலந்து கொடுக்கவும், முட்டையிடும் கோழிகளுக்கு சிப்பித்தூள் தனியாகக் கொடுக்க வேண்டும்.

இறுதியாக எமது பிரதேச கோழிப் பண்ணையாளர்கள் எவ்வாறு நோய் தடுப்பு முறைகளை பின்பற்றுவதன் மூலம் தமது உற்பத்தியை அதிகரிக்க முடியும் எனப் பார்ப்போம்.

தடுப்பூசி ஏற்றுதல், புழுக்களைக் கட்டுப்படுத்தலும்

நோய்க்கட்டுப்பாடு, தடுப்புமுறைகள் பற்றி சில விளக்கங்களை உங்களுடன் இங்கு பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன். எவ்வாறாயினும் நோய் அறிகுறிகள் தென்படின் அருகில் உள்ள கால்நடை வைத்தியரை அணுகித் தேவையான ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் பெறுதல் சிறந்தது. இதன் மூலம் உங்கள் பண்ணைகளை அழிவில் இருந்து பாதுகாக்கவும் நஷ்டந்தைத் தவிர்க்கவும் இது கைகொடுக்கும்.

*(தொடரும்)*

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் - 101
திகதி - 19.02.2011
ஜாதிக சம்பத Jathika Sampatha
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து A அதிர்ஷ்ட இலக்கம் 05 வெற்றி இலக்கம் 4 1 4 7 4
வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | A 05 4 1 4 7 4 | ரூ. 10,116,314.00 | - |
| 1 பரிசு | 05 4 1 4 7 4 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 4 1 4 7 4 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 1 4 7 4 | ரூ. 10,000.00 | 25 |
| 4 பரிசு | 4 7 4 | ரூ. 1,000.00 | 261 |
| 5 பரிசு | 7 4 | ரூ. 50.00 | 2617 |
| 6 பரிசு | 4 | ரூ. 20.00 | 25160 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | |
| 7 பரிசு | 4 1 4 7 | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | 4 1 4 | ரூ. 100.00 | 267 |
| 9 பரிசு | 4 1 | ரூ. 50.00 | 2651 |
| 10 பரிசு | A | ரூ. 20.00 | 10327 |
| 11 பரிசு | A 05 | ரூ. 100.00 | 1250 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,961,840.00
தேசிய லொத்தர் சபை
அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ.10,518,181.00
www.nlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2201 திகதி 19-02-2011
ஆங்கில எழுத்திற்கும் V
வெற்றி எண்கள் 02 29 30 42
போனஸ் இல: 09
ஜக்பொட் பரிசு ரூ. 12,608,675/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 203100 | 20/- | 4,062,000/- |
| 2 இல | 14574 | 100/- | 1,457,400/- |
| 3 இல | 303 | 1,000/- | 303,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8130 | 40/- | 325,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 533 | 1,000/- | 533,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 12,608,675/- | - |
| 1 இல + போனஸ் இல | 9608 | 100/- | 960,800/- |
| 2 இல + போனஸ் இல | 446 | 500/- | 223,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 403 | 200/- | 80,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,508,000/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 237147 | | 10,108,000/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 302873785-7-22 |
| இரத்தினபுரி | 302874578-0-24 |
| குருணாகல் | 302869435-4-13 |
| களுத்துறை | 302879917-8-02 |
| பதுளை | 302878493-4-28 |
| யாழ்ப்பாணம் | 302891051-8-27 |
| மாத்தளை | 302883332-6-31 |
| புத்தளம் | 302869508-3-39 |
| கொழும்பு | 302872208-7-14 |
| கம்பஹா | 302871754-3-42 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 13,162,925/-
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் உள்ள ஸ்தாபனம் ஒன்றிற்கு கணினியில் Corel Draw, Photoshop இல் printing வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. யாழ். நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

T.P:- 0750430863

## 31 ஆம் நாள் நினைவும், நன்றிநவிலலும் வீட்டுக்கிருத்திய மதியபோசன அழைப்பும்

அமரர்

**கணபதி ஐயாத்துரை**



அன்னைமடியில்
24.03.1940

ஆண்டவன் அடியில்
20.01.2011

கடந்த 20.01.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 19.02.2011 இல் நடைபெற்றன. இன்று (21.02.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம் பெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்ப விளக்கின் பிரிவை அறிந்து தொலைபேசியூடாகவும், நேரடியாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் 31ஆம் நாள் வீட்டுக் கிருத்திய நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

56/9, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 3219943.

திருமதி மலர் ஐயாத்துரை
குடும்பத்தினர்.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
12 . 07 . 1928

உதிர்வு
20 . 02 . 2007

திதி: திருதியை

**அமரர் கந்தையா நல்லதம்பி**

(அச்சுவேலி லிபேட்டி சினிமா உரிமையாளர்)

ஆண்டு நான்கு ஆனது ஐயா
உங்கள் அன்புமுகம் மறந்ததில்லை
ஆருயிராய் நீங்கள் இருந்தீர்கள்
கண்மணி போல் எம்மைக் காலமெல்லாம் காத்தீர்கள்
தரணியிலே எம்மைத் தலை நிமிர வைத்தீர்கள்
அகிலத்தில் நாம் உயர வழிகாட்டிய தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

லிபேட்டி,
அச்சுவேலி.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கோப்பாயில் சுயதொழில் உதவி

நாவற்குழி, பெப்.21

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 12 பேருக்கு தலா 7500 ரூபா வீதம் சுயதொழில் நிதி வழங்கப்படவுள்ளது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்குரிய நிதியை வழங்கியுள்ளது.

உரிய பயனாளிகள் தமது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை சகிதம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை கொடுப்பனவுப் பத்திரத்தில் கையொப்பமிட வருமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

அவர்கள் விவரம் வருமாறு:-

க. ஜெயராசா, மாரியம்மன் வீதி, கோப்பாய் மத்தி, தெ. புவனேஸ்வரி, சடையகாடு, அச்செழு, க.நாகேஸ்வரி, சடையகாடு, அச்செழு, வ. ஞானேஸ்வரி, சடையகாடு, அச்செழு, சி. கலைச்செல்வி, காளிகோயிலடி, ஊரெழு, ர. மேரிறோசலினா, புத்தூர் வடக்கு, இ. பத்மலதா, வாதரவத்தை, நா. ரவீந்திரன், கோப்பாய் வீதி, உரும்பிராய், சி. பாலசிங்கம், கலைமதி வீதி, புத்தூர் மேற்கு, தே. சிவநாதன் ஏரந்தனை, புத்தூர் வடக்கு, சி. பிரபாகரன், கட்டையப்புலம், கோப்பாய் வடக்கு, சி. ஞானசேகரன் பாரதி வீதி, பத்தமேனி.

(ஐ)

## விற்பனைக்குண்டு

உடுவில் மானிப்பாய் வீதியிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு முன்பாகவுள்ள (உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையிலுள்ள) 4 பரப்புக் காணியுடன் வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-0772887475

## உழவு இயந்திரம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள135 England உழவு இயந்திரம் பெட்டியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0772887475

## மணமகள் தேவை

யாழ். அரச உத்தியோகம், 31 வயதுடைய 7ல் செவ்வாய், பாவம் 97 உள்ள RC மணமகனிற்கு மணமகள் தேவை.

தொடர்பு:- 0756122445

## VACANCIES

Vacancies for
**Computer Hardware Technicians & Receptionist with Office Administration Power.**
Please Contact with Director (Tel:- 0714182541) and fix the interview Date & Time.

The Applicants from
Jaffna town, Nallur, Ariyalai areas are preferred.

## AUTO CAR HIRE




திருமண வைபவங்களுக்கு கார் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
0215673555/ 25673666

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் வீட்டுவேலைக்குப் பணிப்பெண் தேவை.

தொடர்பு:- 0718474312

## கண்ணீர் அஞ்சலி

*திருமதி ரஞ்சிதமலர் அபிமன்னன்*



*(பெண் பரிசாரகர்)*

எமது வைத்தியசாலையில் பெண் பரிசாரகராக கடமையாற்றி 2011.02.19 ஆம் திகதி இறைபதம் அடைந்த திருமதி ரஞ்சிதமலர் அபிமன்னனது இறப்பில் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தவர்களின் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஆதார வைத்தியசாலை,
தெல்லிப்பழை. (சி/576145)

வைத்திய அத்தியட்சகரும்,
உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

## துயர் பகிர்கிறோம்



இல.21 பிள்ளையார் கோயில் வீதி திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்டவரும், இளைப் பாறிய பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஆய்வு கூட உதவியாளரும் மகாதேவ ஆச்சிரம ஆரம்ப கால உறுப்பினரும், ஆச்சிரம பண்ணிசைப் புலவரும் திருமறை இசைப் புலவருமான

**நாகலிங்கம் வியாக்கிரமபாதர்**
(கலாபூஷணம்)

19.02.2011 அன்று இறைபதமடைந்தார். அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா இறைவனடிசேர பிரார்த்திப்பவர்கள்.

பிள்ளையார் கோயில் வீதி,
திருநெல்வேலி.

சி.ராஜ்குமார் குடும்பம்,
க.இரகுநாதன் குடும்பம்,
மா.தங்கராசா குடும்பம்

## மரண அறிவித்தல்

*நாகலிங்கம் வியாக்கிரமபாதர்(கலாபூஷணம்)*



*(இளைப்பாறிய பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஆய்வுகூட உதவியாளர்)*

இல.21, பிள்ளையார் கோயில், திருநெலிவேலியைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி கட்சன் வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட நாகலிங்கம் வியாக் கிரமபாதர் 19.02.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கம் - தங்கைச்சிஅம்மா தம்பதியரின் அன்பு மகனும், அன்னமுத் துவின் அன்புக் கணவரும், மாணிக்கவாசகர் (பிரான்ஸ்), சத்தியவாகீஸ்வரன் (திருநெல்வேலி), நாகேஸ்வரி (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிரிஜா (முன்னாள் ஆசிரியை வட்டக்கச்சி ம.வி - லண்டன்), கிருபாகரன் (பிரான்ஸ்), கிருபானந்தன் (கால்நடை உதவியாளர் - வட்டக்கச்சி), கிருபாலினி (வவுனியா, வ/பூந்தோட்டம் ம.வி ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வசந்தகுமாரன், வசந்தன் (லண்டன்), கோகிலா (பிரான்ஸ்), பர்மிலா (வட்டக்கச்சி), கணேசமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சபிசன், தாட்சாயினி, அச்சுனன், கௌதமன், கௌசி, சுசீதனன், கவியரசன், விதுஷா, சேனிலா, சாதகன், காலஞ்சென்ற செவ்விழி (கடைசி பேர்த்தி) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் நேற்று (20.02.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது வட்டக்கச்சி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வட்டக்கச்சி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
பிரித்தானியா:- தொ.பே:-442085998653,
பிரான்ஸ்:- தொ.பே:- 33389437825,
இலங்கை:- செல்லிடப்பேசி:- +94776191172

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/576157)




## நல்லூர் சரவணா ரெக்ஸ்

மதிப்புக்குரிய வாடிக்கையாளர்களின் வேண்டு கோளுக்கு இணங்க..
எதிர்வரும் (27.02.2011) ஞாயிற்றுக்கிழமை வரைமலிவு விற்பனை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அலை அலையாக வாரீர் சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாறிகள்,
பஞ்சாபிகள், பஞ்சாபித் துணிகள் எங்கும் காணாத வாங்காத விலையில்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

Special Offer

இடம் : நல்லூர் (பூங்கனிச் சோலைக்கு முன்பாக)
நேரம் : காலை 9.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை


வாடிக்கையாளர் நலன்கருதி பிரத்தியேகமான இடம்
கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், பஞ்சாபிகள், ஏராளம், ஏராளம்
அள்ளி அள்ளிச் செல்லுங்கள்





**Saravana Tex**
நல்லூர்
சரவணா ரெக்ஸ்
526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P:021 222 1723.

# இருளின் கதவுகளைத் திறந்தவன் 30



பிராட்லேயின் கைது யூலியனின் கோபத்தை அதிகப்படுத்தியிருந்தாலும் அதை வெளிப்படையாகச் சொல்லமுடியவில்லை. அப்படிச் சொன்னால் அது யூலியனுக்கும், பிராட்லேக்கும் மேலும் பாதகமான நிலையை உருவாக்கிவிடும். மெல்லவும் முடியாத, விழுங்கவும் முடியாத ஒரு இக்கட்டான நிலை.

பொதுவாகவே போராளிகளிடம் ஒரு குணவியல்பு இருக்கும். தம் சகாக்களுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் அவர்களின் நினைவாக ஏதாவது ஒரு பாரிய தாக்குதலை மேற்கொண்டு தம் மனவேதனையை அதன் மூலம் தீர்த்துக்கொள்ளும் வழக்கம் அவர்களிடம் இருப்பதுண்டு.

அத்துடன் குறித்த இழப்பால் தாம் துவண்டு விடவில்லை இன்னும் பலமாகவே மாறியுள்ளோம் எனவும் இத்தகைய தாக்குதல்களின் மூலம் நிரூபிப்பதற்கு அவர்கள் விரும் புவர். யூலியனும் ஒரு ஊடகப் போராளி தானே. தன் சகாவான பிராட்லேயின் கைதுக்குப் பதிலடி கொடுக்கும் வகை யில் அவனது தாக்குதல்கள் தீவிரம் பெற்றன.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

2010 ஜூலை 25 அன்று ஆப்கான் தொகுப்பை யூலியன் விக்கிலீக்ஸில் விருந்துக்கு வைத்தான்.அதில் ஆப்கானில் அமெரிக்கா செய்த, செய்து கொண்டிருக்கும் எல்லாத் திரைமறைவு வேலைகளும் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டன.

அவற்றில் மிக முக்கியமானது தனது நேசநாட்டுப் படைவீரர்களான கனடா நாட்டு இராணுவ வீரர்கள் நால்வரின் மரணம் தொடர்பான ஆவணம்.இந்த ஆவணம் அமரிக்காவின் மிச்சமிருந்த கோவணத்தையும் பிடுங்கியெடுத்துவிட்டது.

அந்த ஆவணத்தில் அப்படி என்னதான் இருந்தது?

தலிபான்கள் பதுங்கிருக்கும் இடத்தில் ஒரு கொமாண்டோத் தாக்குதலை நடத்தத் தீர்மானிக்கப் பட்டது.

அமரிக்க-கனடா நாட்டு இராணுவ வீரர்களின் கூட்டு நடவடிக்கையாக இது அமைந்தது. அமெரிக்க கொமாண்டோக்கள் 6 பேரும், கனாடாக் கொமாண்டோக்கள் 4 பேரும் இதில் பங்கேற்பதெனத் தீர்மானித்தாயிற்று.

இருள் தொலையாத ஒரு அதிகாலைப் பொழுதில் தலிபான்களின் மறைவிடம் என்று சொல்லப்பட்ட இடத்தைக் கொமாண்டோக்கள் தம் முற்றுகைக்குள் கொண்டுவந்தனர். நீங்கள் தப்பமுடியாதபடி சுற்றி வளைக்கப்பட்டுள்ளீர்கள். எனவே எல்லோரும் சரணடைந்து விடுங்கள்.

ஒலிபெருக்கி ஒன்றினூடாக இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது. உள்ளே எவ்வித சலனமுமில்லை. நீங்கள் வெளியே வராவிட்டால் உள்ளே தாக்குதல் நடத்த வேண்டியிருக்கும் அடுத்த அறிவிப்பு.

ஆனால் இப்போது அந்த அறிவிப்புக்கு பலன் கிடைத்தது. கைகளினை உயரத் தூக்கியபடி ஒருவன் வெளியே வந்தான். வந்தவன் தட்டுத் தடுமாறிய ஆங்கிலத்தில் ஏதோ சொல்ல முயற்சித்தான்.

நாங்கள் எல்லோரும் சரணடைய விரும்புகிறோம். எங்களைக் கொல்லாதீர் கள் அவனது கோரிக்கை ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து உள்ளிருந்தவர்களை நோக்கி அவன் ஏதோ சைகை செய்தான்.

அவனது சிக்னலை புரிந்து கொண்ட ஏனைய தலிபான்கள் 12 பேர் கைகளை உயர்த்தியபடி வெளியே வந்தனர். எல் லோரும் கைகளில் விலங்கிடப்பட்டு தரையில் இருத்தப்பட்டனர்.

சரி, வாகனத்துக்கு தகவல் அனுப்புவோம். இவர்களை சிறையில் உடனைடியாக அடைக்கவேண்டுமல்லவா?

கனடா நாட்டு வீரன் ஒருவன் சொன்னதைக் கேட்டு அமெரிக்க வீரன் ஒருவன் விழுந்து விழுந்து சிரித்தான்.

இவர்களில் எவருமே உயிருடன் இருக்கப்போவதில்லை. இங்கேயே சுட்டுத்தள்ளவேண்டியதுதான் தாக்குதலுக்குப் பொறுப்பான அமெரிக்க கப்டன் இவ்வாறு சொன்னான். ஆனால் அதற்கு கனடா வீரர்

ஒளண்யன்

கள் மறுப்புத் தெரிவித்தனர்.

நம்முடைய தாக்குதல் திட்டம் இவ்வாறில் லையே. அத்தோடு அவர்கள் நிராயுதபாணிகளாச் சரணடைந்திருக்கிறார்கள்.

அவர்களைச் சுட்டுக் கொல் வது தவறு கனடா வீரர்களின் இந்தச் சொற்கள் செவிடன் காதில் ஊதப்பட்ட சங்குகளாயின.

அமெரிக்கக் கொமாண்டோக்கள் தம் மேலதிகாரிகளிடம் கலந்துரையாடிய பின்னர் ஒரு முடிவுக்கு வந்தனர். இரக்கமற்ற ஒரு சிரிப்பு அமெரிக்கக் கொமாண் டோக்களின் உதட்டில் பிறந்தது. அதன் பின் நிகழ்ந்தது கோரம்.நம்பிக்கைத் துரோகம்.

*(திரைகள் இன்னும் திறக்கும்)*


## தவறிவிட்டது

தெல்லிப்பளை, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் என்னும் முகவரியுடைய திருமதி காந்திமேகராசலிங்கம் பவானின் தேசிய அ. அட்டை மற்றும் [illegible] HNB வங்கிப் புத்தகம் [illegible] ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 021 791 2821 என்னும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/-) 24.02.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை | 0778996085 |
| சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு | 0776904590 |
| நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | 0774656377 |
| முகுந்தன், பருத்தித்துறை | 0771392593 |
| துர்க்கா பாம், சுன்னாகம் | 0779346599 |

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 2226944


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
03.09.1919



விண்ணில்
23.01.2011

### அமரர் அன்னபூரணம் இராசரத்தினம்

கடந்த 23.01.2011 அன்று எம் அன்னை இறைபதமடைந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் ஊடகங்கள் ஊடாக அனுதாபம் தெரிவித் தவர்களுக்கும் இறுதிக்கிரி யையில் பங்குகொண் டோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பது டன் நாளை 22.02.2011 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

278, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (331)

குடும்பத்தினர் சார்பாக
சிவமலர் செகராசா (மகள்).

## கொக்கிளாய் கிழக்கு,மேற்கில் மீளக்குடியேறுவோர் பதிவு செய்க

**அரச அதிபர் தெரிவிப்பு**

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே இவ்விரு கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த மக்களை மீள்குடியேற்றத்திற்காக சொந்த இடத்துக்குச் செல்ல விரும்புவோர் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலுள்ள இங்கும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் அலுவலகத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.


## விற்பனைக்கு

HP COMPAQ 620 LAP TOP, CORE 2 DUO, 320GB,2GB,DVD R/W, Web CAM, WIFI Bluetooth, 1 Year Internat IONAL WARRANTy

தொடர்பு: 0750482599

## தேவை

அரைக்கும் ஆலை, ரயர் வேக்ஸ், மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பு என்பனவற்றில் அனுபவம் உள்ளவரும் பழக விரும்புபவர்களும் தேவை.
தொடர்பு: பிருந்தா மில்ஸ்,
இல.18, நக்கா றோட், யாழ்ப்பாணம். தொ.பே.: 0772231096.

ஃபுபே செட்
வீட்டுக்கும்
மற்றும்
ஹோட்டலுக்கு



ரூபா 3950/-யிலிருந்து
டைடஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை,லிபர்டி பிளாஸா
2439422

## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத்

சீட்டிழுப்பு இலக்கம் 589
திகதி 2011/02/19

சுப்பர் இலக்கம்: 22
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 37 43 67 69

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 37,384,778.40 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 19 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 345 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 714 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 17,528 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 10,127 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 253,037 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 40,545 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 11,383,520.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டதிட்டங்களுக்கு உட்பட்டது
பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 37,842,924.00

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk


## நீங்கா நினைவில் ஆண்டு ஒன்று



அமரர்
### குருநாதபிள்ளை ஞானேஸ்வரன்
(கொழும்புத்துறை)

திதி: சங்கடஹர சதுர்த்தி
(21.02.2011

அன்னைமடியில்
28.08.1945

ஆண்டவன் அடியில்
02.02.2010

எங்கள் பாசமிகு அப்பாவே காலன் உங்களைக்
கவர்ந்துசென்று ஓராண்டு சென்றாலும்
உங்கள் திருமுகத்தை எங்களால் மறக்க முடியவில்லை
வாழ்ந்தோம் சில காலம் உங்களோடு
வாழ்ந்து கொண்டிருக்கிறோம் மிகுதிக்காலம்
உங்கள் நினைவோடு ஓராண்டு அல்ல
ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும் உங்கள்
நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சோடிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

(331)

54/12, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.

குடும்பத்தினர்

# விழிநீர் சொரியும் வணக்கம்

## வேலுப்பிள்ளை பார்வதியம்மாள்

### வல்வை மக்களின் நெஞ்சம் கனத்த வணக்கங்கள்




தமிழ் இனத்திற்காய்த் தரணியே போற்றும்
தவப் புதல்வனைத் தந்த தாய்
அமிழ்தாய் உரித்தாய் உணர்வாய் ஒன்றாய்
எனவலம் வந்தாய் இவ்வையம் போற்றிட
அன்னையே உன்னை வணங்குவோம் என்றும்
இனிதாய் எம்மினம் ஓங்கிட வாழ்ந்தாய்
ஈன்றாய் ஒருமைந்தனை உலகம் உய்த்திட
என்றுமுன் இலட்சியம் ஓங்கிடும் நாள் வரும் – எம்
அன்னையே சென்றுவா தவத் தந்தை உடனிங்கு
நெடுநாள் நம்துயர் நிலைக்காது உண்மை
நாம் மகிழும் காலம் விரைந்தே வரும்

எம் தமிழ் இனம் வாழ இன்னல்கள் பல அனுபவித்து தாய் மண்ணிலேயே
வித்தாகி விட்ட எம் அன்னை வேலுப்பிள்ளை பார்வதி
அம்மாள் அவர்களின் வித்துடல் பொது மக்களின் வணக்க
நிகழ்வுகளுக்காக தீருவில் சதுக்கத்தில் வைக்கப்பட்டு 22.02.2011
செவ்வாய்க்கிழமை காலை அன்னாரது மகளுடைய இல்லத்தில்
கிரியைகள் நடத்தப்பட்டு பிற்பகல் 2.30 மணிக்கு ஊறணி
மயானத்தில் வித்துடல் தகனம் செய்யப்படும்.
தமிழ் மக்கள் அனைவரும் வீரத் தாய்க்கு வணக்கம்
செலுத்திட அலையெனத் திரண்டு வருக

– வல்வை மக்கள்

(சி-576166)



உதயனின் 25ஆவது ஆண்டு வெள்ளிவிழா நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றபோது, உதயனின் நீண்ட காலப்பணியில் உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது. இதில் யாழ். சிவில் நிர்வாக அதிகாரி கேணல் பெரேரா, நல்லை ஆதீனக் குருமுதல்வர், உதயன் நிர்வாக இயக்குநர் ஆகியோர் விளக்கேற்றுவதை காணலாம்.

### எகிப்தில் நடந்ததுபோல் இலங்கையர்களும்

# அரசுக்கு எதிராகப் போராடுவர் என பகல் கனவு காணும் எதிர்க்கட்சிகள்

### சாடுகிறார் வீரவன்ஸ

கொழும்பு, பெப். 21

எகிப்திய மக்கள் அந்த நாட்டு அரசுக்கு எதிராக வீதி யிலிறங்கிப் போராட்டங்கள் நடத்தியது போன்று, இலங்கையர்களும் அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுவார்கள் என்று இந்தநாட்டிலுள்ள வங்குரோத்து நிலையை அடைந்துள்ள சில கட்சிகள் எதிர்பார்த்துள்ளன - என்று வீடமைப்பு, பொறியி யல் மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'ஜயவடனகம' வீட்டுத் தொகுதியில் பொது வசதிகள் செயற்திட்டங்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித் தவை வருமாறு:-

இலங்கையர்களை அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களாக மாற்றி, ஆர்ப்பாட்டங்களில் ஈடு படுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் வீணாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த நிலையில் எகிப்தில் அந்நாட்டு அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதைத் தொலைக்காட்சிகளில் பார்த்துவிட்டு, அதேபோன்று இந்நாட்டு அரசுக்கு எதிராக இலங்கையர்களும் போராட்டங்களில் ஈடுபடுவார்கள் என பகல் கனவு கண்டு கூறிவருகிறார்கள் எதிர்க்கட்சியினர்.

எகிப்தியர்கள் வீதியில் இறங்கியது போன்று, இந்நாட்டு மக்கள் வீதியிலிறங்கிப் போராட்டங்கள் நடத்தமாட்டார்கள். அதற்கு அதிக காரணங்கள் உள்ளன. 30 வருடங்களாக நாட்டில் நிலைகொண்டிருந்த தீவிரவாதத்தை முற்றாக ஒழித்தது இந்த அரசே ஆகும் என்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். அதே போன்று, தற்போது எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருள் களின் விலையேற்றம் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது. இவை போன்ற பல காரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும் - என்றார். (சி)

## சவூதியில் இலங்கை பணிப்பெண்கள் சித்திரவதை

கொழும்பு, பெப். 21

சவூதி அரேபிய எஜமானன் ஒருவரால் உடலில் ஆணிகள் ஏற்றிக் கொடுமைப்படுத்தப்பட்ட பெண் ஒருவர் காலி மாவட் டத்தின் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளனர்.

இவர் காலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். கடந்த நவம்பர் மாதம் முதல் சவூதியில் வீட்டுப்பணிப்பெண்ணாக வேலை பார்த்தார். எஜமானின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் சிலநாள்களுக்கு முன் நாடு திரும்பியிருந்தார். இவர் கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டார். இவரின் கைகளில் ஆணிகள் ஏற்றப்பட்டு இருக்கின்றமை மருத்துவ பரிசோதனைகள் மூலம் வைத்தியர்களால் உறுதிப்படுத்தப்பட்டது.

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி சந்திக்கு அருகில், ஆடிய பாதம் வீதியில் 03 படுக்கை அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 0750369285

## கண்ணீர் அஞ்சலி



எனது மாணவனும், எமது குடும்ப நண்பருமான ந. விநோதரன் அவர்களின் அன்புத் தந்தை

### துரையப்பா நடராசா

அவர்கள் மறைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன், அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

*சமூக விஞ்ஞான கல்வியியற் கல்லூரி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (சி/576165)

சு. கருணாநிதி,
தமிழாசிரியர்.

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் நடைபெறாது.

இதேவேளை, மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்த 2 உள்ளூராட்சிச் சபைகளுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 4 உள்ளூராட்சிச் சபைகளுக்கும், கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த 2 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் தேர்தல்கள் நடைபெறாது என உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். (ஒ-சி)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும், சர்வதேச ரீதியில் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ர)

## திருவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, பார்வதியம்மாளின் பூதவுடலுக்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் , யாழ். மாநகரசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், கூட்டமைப்புப் பிரமுகர் பிருந்தா ஆகியோர் நேற்று அங்குசென்று அஞ்சலி செலுத்தினர். (ஒ-ஐ-319-86-36)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பின்போது மீனவர் சங்கப் பிரதிநிதிகள் 'டோலர்'கள் மூலம் மீன்பிடிப்பதை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரி விடுத்தனர்.

அமைச்சர் இன்னும் ஓரிரு தினங்களில் யாழ். குடாநாட்டிலுள்ள மீனவர் சங்கப் பிரதிநிதிகள் பலருடன் பேச்சு நடத்துவார். இதன் பின்னர் இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகளையும், இலங்கை மீனவர் சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள் வார் என அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01.09.1954

மறைவு
04.03.2010

### அமரர் கதிரவேலு டேவிட்

அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (21.02.2011) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், அத்தருணம் தாங்கள் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

115/9, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.

டேவிட் மகாராணி (மனைவி),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை



நீர்வேலி வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை நேற்று (20.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், வெண்கமலதேவி, குகானந்ததேவி, விமலாதேவி, கமலாதேவி (மருத்துவப் பொறுப்பதிகாரி, மருந்து உற்பத் திப் பிரிவு, அச்சுவேலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், முரு கேசு (E.S.P & Company), சண்முகம்(ஓய்வு பெற்ற உத்தி யோகத்தர்), ரவீந்திரன்(Euroville) ஆகியோரின் மாமனாரும், தர்சினி (ஆசிரியை, மு/ஒட்டடு சுட்டான் ம.வி) அமரர் பிரதீப், தர்சிகா (3ஆம் வருட முகாமைத்துவபீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), தர்மிலா(2ஆம் வருடம் HNDIT உயர் தொழில் நுட்பக் கல்லூரி, குருநகர்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2011) திங்கட்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

திருப்பதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

### சிவபாதசுந்தரம்பிள்ளை கணேசர்



தெய்வங்கேணி வீதி, சரசாலை மத்தி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், பொன்னாவெளி, வேரவில், பூநகரியை வசிப்பிடமாகவும் தற்போது சரசாலையில் வசித்தவருமான சிவபாதசுந்தரம்பிள்ளை கணேசர் நேற்று (20.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம்பிள்ளை - சரஸ்வதி தம்பதி யரின் அன்பு மகனும், புனிதவதியின் அன்புக்கண வரும், காலஞ்சென்ற உமாலினி மற்றும் குணநாதன் (இந்தியா), வினோதன், சக்திவேல் (உயர்தர வகுப்பு மாணவன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திலகவதி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சிவஞானசோதி, நடேசன் (BOC - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணபதிப்பிள்ளை, குமாரசாமி, லலிதாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2011) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சரசாலை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தெய்வங்கேணி வீதி,*
*சரசாலை மத்தி, சாவகச்சேரி.* (சி/576164)

குடும்பத்தினர்.

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்யும் சாத்தியக்கூறு அதிகமாகவுள்ளது.

# வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக தீர்ப்பு வந்தால் உயர் நீதிமன்றத்தை நாடுவோம்

## ஜே.வி.பி. நேற்று அறிவிப்பு

கொழும்பு, பெப். 21

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் சில தெரிவத்தாட்சி அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டமை தவறு. அவை செல்லுபடியாகும் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் அதற்கு எதிராக ஜே.வி.பி. உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் என்று ஜே.வி.பி. நேற்றுக் கூறியது.

தேர்தல் சட்டத்தின்படி செயற்பட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்று அக்கட்சி கூறியது.

பெலவத்தையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க இவ்வாறு கூறினார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களில் சில நிராகரிக்கப்பட்டன. தேர்தல் சட்டத்தில் உள்ளபடி வேட்புமனுக்கள் தயாரிக்கப்படாவிட்டால் மாத்திரமே தெரிவத்தாட்சி அதிகாரிகளால் வேட்புமனுக்களை நிராகரிக்க முடியும். அதைத் தான் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

இந்த விடயத்தில் சட்டமா அதிபர் செயற்படும் விதம் குறித்து எம்மிடையே கடுமையான விமர்சனம் உண்டு.

மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக கட்சிகள் நீதிமன்றம் செல்லும் முன் வேட்புமனுக்களை நாம் சரியாகத் தயாரித்தோமா இல்லையா என்று எண்ணிப்பார்க்கவேண்டும்.

2002 மற்றும் 2006களில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டபோது தெரிவத்தாட்சி அதிகாரிகள் சரியாகவே செயற்பட்டனர் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பை கட்சிகள் பின்பற்றவேண்டும்.

ஆகவே, வேட்புமனுக்களை நிராகரித்த தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் நடவடிக்கை எடுத்தால் அதற்கு எதிராக நாம் உயர்நீதிமன்றம் செல்வோம் - என்றார். (ஒ-சி)

## மூன்று இந்து ஆலயங்கள் நெதர்லாந்தில் நிர்மாணம்

நெதர்லாந்தில் மூன்று இந்து ஆலயங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

நெதர்லாந்தில் ட்ராவோ மற்றும் ஹக்கே நகரங்களில் அதிக அளவிலான இந்துக்கள் வசித்து வருகின்றனர்.

நிர்மாணிக்கப்படும் இந்த ஆலயங்கள் அந்த நாட்டைச் சேர்ந்த உள்ளூராட்சி சபையின் உறுப்பினர் ஒருவரினால் வடிவமைக்கப்பட்டது.

இந்த ஆலயங்களில் ஒன்று ஒரே வளாகத்தில் அமைவதுடன், 45 அறைகளுடனான கட்டடங்களைக் கொண்டதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அம்பாந்தோட்டை, சூரியவெவ மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று இலங்கைக்கும், கனடாவுக்குமிடையிலான போட்டி நடைபெற்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் புரூஸ் ஜெரி, விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் ஏ.எச்.எம்.அஸ்வர் எம்.பி. ஆகியோர் போட்டியைக் கண்டு களிக்கின்றனர்.

## வெங்காயச் செய்கையில் விவசாயிகள் தீவிரம்

கோப்பாய், பெப். 21

வலி.கிழக்கு பிரதேச விவசாயிகள் வெங்காயச் செய்கையில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இப்பிரதேச விளை நிலங்களில் பார்க்குமிடமெங்கும் வெங்காயப் பயிர் மயமாகவே காட்சியளிக்கின்றது. அச்சுவேலி, புத்தூர், சிறுப்பிட்டி பகுதிகளில் ஏறக்குறைய முழு நிலங்களிலும் வெங்காயமே பயிரிடப்படுகிறது.



தற்போதைய நிலையில் வெங்காய வளர்ச்சி சிறப்பாக இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அறுவடை தொடங்கிய விவசாயிகள் உச்ச இலாபத்தைப் பெறக்கூடியதாக உள்ளது என்றும் அந்தர் 4,500 ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரை விலைபோகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-72)

# தூக்குத் தண்டனையை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும்

## பொதுமக்கள் கூறும் ஆலோசனை

கொழும்பு, பெப்.21

பாரதூரமான குற்றங்கள் தொடர்பாக மீளவும் தூக்குத் தண்டனை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டியுள்ளது என்று 'நாட்டுக்குக் கிரீடம்' பொருட்காட்சியில் அமைந்திருந்த சிறைச்சாலைகள் காட்சியறையைப் பார்வையிட்ட ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஆலோசனைகளை வழங்கியிருந்ததாக சிறைச்சாலைகள் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஏ.திஸநாயக்க தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் காட்சியறையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தூக்கு மரத்தைப் பார்வையிட வந்திருந்தோருக்கு விநியோகிக்கப்பட்ட பரிசீலனைப் பத்திரங்களோடு இந்த ஆலோசனை விசேடமாகப் பொது மக்களால் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் செயலாளர் கூறினார்.

மேற்படிச் சிறைச்சாலைகள் காட்சியறையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மாதிரித் தூக்கு மரத்தை ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிட்டிருந்தனர் என்றும் அதன் செயற்பாட்டைத் தெரிந்து கொள்வதற்கு அதிக அக்கறை காட்டினர் என்றும் திஸநாயக்க குறிப்பிட்டார். (ஒ-22)

## புதிய நியமனம்

யாழ்ப்பாணம், பெப். 21

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தராக எஸ்.பத்மநாதன் வடக்கு மாகாண ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டு கடமையாற்றி வருகின்றார். இவர் ஒப்பந்த அடிப்படையில் இக்கடமையை ஆற்றி வருகின்றார்.

அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தராக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய எஸ்.சிவபாலன் கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் தமது பதவியில் இருந்து விலகியுள்ளார். (ஒ-300)

# ஆங்கிலப்பாட விவகாரம் முடிவாகும்வரை பரீட்சை விண்ணப்பங்கள் இடைநிறுத்தம்

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.21

பல்கலைக்கழக அனுமதிக்கு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடச் சித்தி அவசியமா எனக் கல்வியமைச்சின் செயலாளர் உறுதிப்படுத்தும் வரை இந்துமுறை நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்கான (புதிய பாடத்திட்டம்) விண்ணப்பப் படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட மாட்டா எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பங்கள் தயாராக உள்ளன.

பல்கலைக்கழக அனுமதிக்கு ஆங்கிலப் பாடம் கட்டாயமா என்பதை கல்வியமைச்சின் செயலாளர் உறுதிப்படுத்தும்வரை இந்த விண்ணப்பப் படிவங்கள் தாமதப்படுத்தப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளில் வெளியிடப்படும் அறிவித்தல்களிலும், பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கைகளிலும் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதிகள் தெரிவிக்கப்படவேண்டும்.

இது தொடர்பில் கல்வியமைச்சின் செயலாளரின் ஒப்புதல் கிடைத்த பின்னரே மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்- என பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நிகழ்வுகள்

### பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.21

தீவக கல்வி வலய வேலணை, நெடுந்தீவு கோட்டப் பாடசாலைகளில் தரம் 3, 4, 5 வகுப்புகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு யாழ். பிராந்திய ஆங்கில வள நிலையத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் பயிற்சிக் கருத்தரங்கு இன்று மு.ப 8.30 மணிக்கு வேலணை ஆசிரியர் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

ஆங்கில பாடநூல் பயிற்சிப் புத்தகம், ஆசிரிய கைநூல் என்பவற்றையும் எடுத்து வருமாறு ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கதிரேசப்பிள்ளை தெரிவித்துள்ளார். (ஒ-323)

### கற்றல் செயற்பாடுகள்

தீவக கல்வி வலய திறந்த பாடசாலை அலகின் பிராந்திய கற்கை நிலைய கற்றல் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று பி.ப 3 மணிக்கு அம்பிகை நகர் பொதுமண்டபத்தில் இடம்பெறுகின்றது.

இக் கலந்துரையாடலில் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொள்ளுமாறு தீவகம் திறந்த பாடசாலை சிரேஷ்ட போதனாசிரியர் க.கதிரேசப்பிள்ளை தெரிவித்துள்ளார். (ஒ-323)

### பேடன் பவல் தினம்

கோப்பாய், பெப். 21

இலங்கை சாரணர் சங்கம் பருத்தித்துறை மாவட்டம் நடத்தும் பேடன் பவல் தினம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் மாவட்ட சாரண ஆணையாளர் மு.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார். (ஒ-72)

# தன்னாட்சி உரிமையைப் பெறுவதற்கான உழைப்பே நாம் அன்னைக்கு செய்யும் அஞ்சலி

## பார்வதி அம்மாளுக்கான இரங்கலில் சுரேஷ்

யாழ்ப்பாணம், பெப். 21

ஈழத் தமிழர்கள் அரசியல் ரீதியாக தன்னாட்சி உரிமையைப் பெறுவதும் அதை நோக்கி உழைப்பதுமே அன்னாருக்கு நாம் செய்யும் அஞ்சலியாக அமையும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், பார்வதி அம்மாளின் மறைவையிட்டு வெளியிட்டுள்ள இரங்கற்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருமதி வேலுப்பிள்ளை பார்வதி அம்மாள் அமரத்துவம் அடைந்த செய்தி தமிழ் மக்களை ஆறாத்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களை ஈன்றெடுத்த கருவறை என்ற வகையில் ஈழத்தமிழர்கள் மாத்திரமல்லாமல் உலகத் தமிழர்கள் அனைவருமே பார்வதி அம்மாளை உணர்வு ரீதியாக தமக்கு நெருக்கமான ஓர் உறவாகவே கருதி வந்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் முற்றுகைக்குள் இருந்து விடுபட்டு வவுனியா நலன்புரி முகாமில் பார்வதி அம்மாள் தனது கணவர் அமரர் திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களுடன் தங்கியிருந்த வேளை பாதுகாப்புப் படையினரால் பிடிக்கப்பட்டு இருவரும் கொழும்புக்குக்கொண்டு செல்லப்பட்டிருந் தனர். தடுப்புக் காவலில் இருந்த சமயம் திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் உயிரிழந்ததையடுத்து பார்வதி அம்மாளை அரசு விடுதலை செய்திருந்தது.

எனினும் வெளிநாடுகளில் வதியும் அவரது பிள்ளைகளுடன் அவர் இணைந்து வாழ்வதற்கு அந் நாடுகளின் சட்டம் குறுக்காக நின்றது. இதனால் பார்வதியம்மாள் நோயுற்றிருந்த நிலையில் தனது கடைசிக் காலத்தை யாழ்ப்பாணத்து மருத்துவமனைகளிலேயே கழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உலகத் தமிழர்கள் அனைவரது ஆதரவு இருந்தும் பார்வதி அம்மாள் இவ்வாறு தனித்து விடப்பட்டமை ஒரு வரலாற்றுத்துயரமே.

அன்னாரின் மறைவினால் துயருறும் தமிழ் மக்களில் நானும் ஒருவனாக எனது வேதனையைப் பகிர்ந்து கொள்கிறேன். ஈழத்தமிழர்கள் அரசியல் ரீதியாக தன்னாட்சி உரிமையைப் பெறுவதும் அதை நோக்கி உழைப்பதுமே அன்னாருக்கு நாம் செய்யும் அஞ்சலியாக அமையும் - என்றுள்ளது. (ஒ)

# பஹ்ரேன் செல்லத் தற்காலிகத் தடை

பஹ்ரேனில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களைக் கருத்திற்கொண்டு அந்த நாட்டுக்கு இலங்கைப் பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

பஹ்ரேனுக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்ல தயாராகவிருந்த ஒரு தொகுதி பணியாளர்களின் பயணம் ஒருவார காலத்துக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் பயணங்கள் ரத்துச் செய்யப்படவில்லை என்றும் இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# கறுப்புக் கொடிகளை அகற்றும்படி வடமராட்சியில் ராணுவம் கெடுபிடி

யாழ்ப்பாணம், பெப். 21

பார்வதி அம்மாளின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கறுப்புக் கொடிகளைக் கட்ட வேண்டாம். அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிக ளில் பிரபாகரனின் பெயரைப் பாவிக்க வேண்டாமென இராணுவத்தினர் கடுமையாக உத்தரவிட்டுள்ளனர் என யாழ். மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் நேற்றுத் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் உத்தரவையும் மீறி, மக்கள் வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக் கொடியைப் பறக்கவிட்டுள்ளனர். பிரபாகரன் பெயரைக் கொண்ட அஞ்சலி சுவரொட்டிகளை இராணுவத்தினர் இளைஞர்களைக் கொண்டு அகற்றி வருகின்றனர்.

அஞ்சலி சுவரொட்டிகளில் பிரபாகரன் பெயரைப் பாவிக்க வேண்டாம் எனவும், 'வேலுப்பிள்ளை பார்வதி அம்மாள்' எனப் பாவிக்கும்படியும் இராணுவத்தினர் பணித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

# அரியநேத்திரனின் இரங்கல் செய்தி

கொழும்பு, பெப்.21

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மனித ஆயுள் மூன்று கட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. முதலாவதாக தாயின் வயிற்றிலிருந்து ஒரு குழந்தை பிரசவித்து முப்பது வயதுக்குள் மரணமேற்படுமாயின் அதை அற்ப ஆயுள் எனவும் -

இரண்டாவதாக முப்பது வயதில் இருந்து அறுபது வயதுக்குள் மரணம் ஏற்படின் அதை மத்திம ஆயுள் எனவும் -

மூன்றாவதாக அறுபது வயதிற்கு மேல் மரணமேற்படின் அதைத் தீர்க்க ஆயுள் எனவும் எமது முன்னோர்கள் தெரிவிக்கின்றனர்.

எமது மண்ணில் கடந்த பல ஆண்டுகளாக பல இலட்சம் பேர் அற்ப ஆயுளுடனும், மத்திம ஆயுளுடனும் அகால மரணமடைந்துள்ளனர்.

இந்த வகையில் பார்வதியம்மாள் அவற்றையெல்லாம் தாண்டி தீர்க்க ஆயுளுடன் இயற்கை எய்திருக்கிறார்.

பிறக்கின்ற மனிதர்கள் அனைவரும் இறந்துதான் ஆக வேண்டும். ஆனால் அவர்கள் வாழும் காலத்தில் என்ன நற்பணிகளைச் செய்தார்களோ அதைப் பொறுத்துத்தான் உலகம் அவர்களைப் போற்றும்.

இந்த நேரத்தில் இறைவனடி சேர்ந்த பார்வதியம்மாளின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதோடு அவரின் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்மைப்பானது தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றது.

# ஆனையிறவில் உப்பு உற்பத்தி விரைவில் ஆரம்பமாகும்

கொழும்பு, பெப். 21

ஆனையிறவு உப்பளத்தில் உப்பு உற்பத்தி நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாகச் செயலிழந்து போயிருந்த உப்பளத்தில் முன்னர் வருடத்திற்கு 79 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரையிலான மெட்ரிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

தற்போது அம்பாந்தோட்டை புந்தல, பலட்டுப்பான மற்றும் புத்தளம் ஆகிய இடங்களில் உப்பு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனையிறவு உப்பள நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இறக்குமதி செய்யப்படும் சோடியம் குளோரைட் உப்பின் இறக்குமதியை மட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்மூலம் கணிசமான அந்நிய செலாவணியைச் சேமிக்க முடியும் என வர்த்தக சமூகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போது 60 சதவீதமான உப்பு இலங்கையில் உற்பத்தியாகும் அதேவேளை, 40 சதவீதமனா உப்பினை இறக்குமதி செய்ய வருடாந்தம் அரசு 38 கோடி ரூபா அந்நிய செலாவணி செலவாகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அன்னை பார்வதியம்மாளுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அஞ்சலி செலுத்துகிறார்.

# பாகிஸ்தான் பெண்கள் இருவர் இலங்கையில் தஞ்சம் கோரினர்

கொழும்பு, பெப். 21

பாகிஸ்தானில் தங்களுக்கு உயிர் அச்சுறுத்தல் காணப் படுகிறது எனவும், கடுமையான இஸ்லாமிய விதிமுறை களைக் கடைப்பிடிக்குமாறு பெற்றோரால் கட்டாயப்படுத்தப்படுகின்றனர் எனவும் தெரிவித்து இரண்டு பாகிஸ்தானி யப் பெண்கள் இலங்கையில் தஞ்சம் கோரியிருக்கின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் யூ.என்.எச்.சி. ஆரின் ஊடாக குறித்த இரு பாகிஸ்தானியப் பெண்களும் இலங்கையில் தஞ்சம் கோரியுள்ளனர் என்று அவர்கள் சார்பிலுள்ள சட்டத்தரணி அசல ரக்காபத் தெரிவித்துள்ளார். இந்த இரண்டு பாகிஸ்தானியப் பெண்களின் பெற்றோருக்கு இருக்கின்ற செல்வாக்குக் காரணமாக இவர்கள் தொடர்பான வழக்கில் அவர்களிடமிருந்து ஏதாவது அழுத்தம் பிரயோகிக்கப்படலாம் என மேலும் அவர் தெரிவித்துள்ளார். இந்த இரு பெண்களும் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை மறுக்கின்றனர் என அவர்களது பெற்றோர் சார்பில் உள்ள சட்டத்தரணி என்.எம். சாஹிட் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிலிருந்து இலங்கையில் தஞ்சம் கோரிய குறித்த இரு பெண்களும் 18 மற்றும் 20 வயதுக்கு உட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை மீனவரை விடுவிக்கக் கோரிக்கை

கொழும்பு, பெப். 21

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி சிலாபத்தில் மீனவர்களின் உறவினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது உறவுகள் விடுதலையடைந்து நாடு திரும்ப வேண்டுமென இறைவழிபாட்டில் ஈடுபட்ட மீனவர் குடும்பங்கள், இலங்கையில் இந்திய மீனவர்களுக்கு விடுதலை அளிக்கப்பட்டதைப் போலவே இலங்கை மீனவர்களும் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

நூற்றுக்கணக்கில் பிடிபட்ட இந்திய மீனவர்கள் மூன்று நாள்களுக்குள் விடுவிக்கப்பட்ட நிலையில் தமது மீனவர்கள் பிடிபட்டு 65 நாள்களாகியும் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மீனவர்களின் உறவினர்கள் விசனம் தெரிவித்தனர்.

இரண்டு நாடுகளின் மீனவர்கள் தொடர்பில் அரசுகள் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருக்க முடியாது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர் குடும்பங்கள் சுட்டிக்காட்டின.

அரசின் நல்லெண்ண வெளிப்பாடாக இந்திய மீனவர் விடுதலையைக் கருதி, தடுத்துவைக்கப்பட்டுள்ள தமது கணவர்மார் மற்றும் பிள்ளைகளை இந்திய அதிகாரிகள் விடுவிக்க முன்வர வேண்டும் என சிலாபத்தைச் சேர்ந்த மீனவர் குடும்பத் தலைவிகள் கோரினர்.

இந்தியாவில் இலங்கை மீனவர்கள் 94 பேருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளபோதிலும் அவர்கள் நாடுதிரும்ப முடியாது தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, இந்தியாவில் விடுதலையாகியுள்ள 21 பேரும் நான்கு படகுகளும் ஞாயிற்றுக் கிழமை காங்கேசன்துறை ஊடாக இலங்கை வந்தடையவுள்ளனர் என மீன்பிடிவள திணைக்களத்தின் உதவி அத்தியட்சகர் லால் டி சில்வா பி.பி.சியிடம் தெரிவித்துள்ளார். இதுதவிர இலங்கை மீனவர்கள் இன்னும் ஆறு பேர் இந்தியாவில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என அவர் கூறினார்.

# மரண அறிவித்தல்கள்

## அரியபுத்திரன் நமசிவாயம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அரியபுத்திரன் நமசிவாயம் கடந்த 19.02.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியபுத்திரன் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கணேசபிள்ளை மற்றும் குலேந்திராதேவி, தர்மபாலன், விமலாதேவி, புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பாக்கியலட்சுமி, இன்பசுந்தரம், விஜயகுமாரி, ஜெயபாலா, லோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வர்சினி, வர்ணன், பிரணவன், கோகுலன், கஜன், லோஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, பார்வதி தெய்வானை மற்றும் தங்கமுத்து, பரமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நடராசா, கணபதிப்பிள்ளை, தங்கம்மா, கமலம், அம்பலவாணர், கந்தையா, பொன்னம்பலம் மற்றும் புவனேஸ்வரி, தில்லையம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2011) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அனலைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

*3ஆம் வட்டாரம்,*
*அனலைதீவு.*

தகவல்:
பொ.இன்பசுந்தரம்(மருமகன்)

## கந்தப்பிள்ளை கனகராஜா



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை கனகராஜா கடந்த 18.02.2011 வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற விஜயலக்சுமியின் அன்புக் கணவரும், சாந்தகௌரி (ஆஸ்திரேலியா), சாந்தசொரூபன் (கனடா), சாந்தபவான் (கனடா), ஆகி யோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், கோபாலசிங்கம் மற்றும் சந்திரசேகரம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீஸ்கந்தராஜா, ரஞ்சனி(ராஜி), நந்தினி ஆகியோரின் அன்பு மாமனும் ஸ்ரீஜனனி, அனோஜன், வித்யா, வினுஜா, சந்தியா, சனகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2011) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
2ஆம் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
பிள்ளைகள்

## இராசையா பொன்னம்பலம்



காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் சின்னாலடி, தங்கோடையை வசிப்பிடமாகவும் தற்போது இல.815, சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ். வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற மாவட்டவன அதிகாரியும் அரசாங்க மரக் கூட்டுத்தாபன செயற்பாட்டு முகாமையாளரு மான இராசையா பொன்னம்பலம் நேற்று (20.02.2011) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலா யன் பென்சனர் இராசையா - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும் சின்னாலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனர் நடராசா - சீதேவிப்பிள்ளை (சின்னன்) தம்பதியரின் மருமகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மகாதேவன், செல்லத்துரை, கமலாம்பிகை ஆகியோரின் அருமைச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான வலாம்பிகை, தேவராஜா ஆகியோரின் அருமை மைத்துனரும் விஜயலட்சுமி, நடராஜா (நிர்வாக உத்தியோகத்தர், ஐ.சி. ஆர்.சி., கொழும்பு), சிவானந்தராஜா (அதிபர், கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம், காரைநகர்), நாகரத்தினராஜா (கணக்காளர், அவுஸ்திரேலியா), இராம கிருஷ்ணராஜா (பிரதம் முகாமைத்துவ உதவியாளர், அரச மரக் கூட்டுத்தாபனம், யாழ்.), நாகபூசனி (ஆசிரியை, ஸ்ரீகணேசா தமிழ் வித்தியாலயம் , பசறை) ஆகியோரின் அருமைத் தந்தையும் சாம்பசிவம் (பிரதித் திட்டப்பணிப்பாளர் NELSIP), கங்காதேவி, இராஜேஸ்வரி, அன்னம்மா (அவுஸ்திரேலியா), தர்மகுமாரி, பஞ்சலிங்கம் (ஆசிரியர், பசறை தமிழ் மகாவித்தியாலயம்), தில்லைராஜா (புதூர் சந்தி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுதர்சன், பத்மபிரியா, சிவகாந்தன், ஸ்ரீசங்கர், ஸ்ரீகோகுலன், திருமகள், பிரசன்னா, பிரசாத், பிரவீன், சிவ பிருந்தன், சிவவதனி, பிரகாஷ், தருண், வரனிதா, உதயப வன், கஜவதனன், கஜவதனி, ஜிவானி ஆகியோரின் அருமைப் பேரனும் அக்ஷ யனின் அருமைப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2011) திங்கட்கிழமை யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.815, சிவலிங்கப்புளியடி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
நாகம்மா (மனைவி)
0212225868

### மத்திய கிழக்கில் பணியாற்றும்

# இலங்கையர்கள் அங்கு நடக்கும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடாதீர்கள்

கொழும்பு, பெப். 21

மத்திய கிழக்கில் பணியாற்றும் இலங்கையர்கள் அங்கு நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்ற வேண்டாம் எனக் கோரப்பட்டுள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமால் பெரேரா தெரிவித்துள்ளார்.

பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையர்களின் பாதுகாப்பு குறித்து விசாரிக்குமாறு இலங்கைத் தூதரகங்களை வெளிவிவகார அமைச்சு கோரியுள்ளது.

மேற்படி ஆபத்தான நிலைமையில் இலங்கை சம்பந்தப்படுவதற்கு தயாரில்லாததால் அந்நாடுகளில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் எதிலும் பங்குபற்ற வேண்டாம் என இலங்கை மக்கள் கோரப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் நியோமால் பெரேரா கூறினார்.

பஹ்ரெய்ன், லிபியா ஆகிய நாடுகளில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் இலங்கையர் எவரும் காயமடையவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை பஹ்ரெய்னுக்கு தொழில் வாய்ப்புகளுக்காக இலங்கையர்களை அனுப்புவதை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு நவம்பரில் 5929 இலங்கையர்கள் பஹ்ரெய்னுக்கு தொழில் வாய்ப்புக்காக சென்றிருந்தமை புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அதேவேளை லிபியாவுக்கு 161 இலங்கையர்கள் சென்றிருந்தனர்.

## ஆஸி நோக்கிச் சென்ற 17 பேர் கைது

அவுஸ்திரேலியாவை நோக்கி சட்ட விரோதமான முறையில் பட கொன் றில் சென்ற 17 இலங்கையர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹம்பாந்தோட்டைக்கு தெற்கே 20 கடல் மைல் தொலைவில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்துள்ளார்.

இவர்களை மேலதிக விசாரணைகளுக்காக பொலிசாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக கடற்படை பேச்சாளர் மேலும் தெரிவித் துள்ளார். கடற் படையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து இவர்கள்கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி படகிலிருந்து உலர் உணவுப் பொருள்கள், தண்ணீர் போத்தல்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

**மதுரம்ஸ் இசைக்குழு**
இசை நிகழ்வுகளுக்கு
தொடர்பு: கே. கண்ணன், இல.125,
கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்,
தொ.பே.: 0779184067

**காணி விற்பனைக்கு உண்டு**
நக்கா லேன் - நல்லூரில் - இல.37இல் மூன்று பரப்புக் காணி (மூன்று பக்க மதிலுடன்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு இலக்கம்
071-8474519 (C/235)

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாம்பிகை கிருஷ்ணராசா



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை கிருஷ்ணராசா நேற்று (20.02.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -. தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கிருஷ்ணராசாவின் (இணுவில் பத்திரிகை முன்னாள் முகவர்) அன்பு மனைவியும் தயாளினி (U.K), ஐங்கரன் (கனடா), யாழினி (ஆசிரியை, யா/கலட்டி மெதடிஸ்த மிஷன் த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் விஜயகுமாரன் (U.K), விஜயரூபி (கனடா), கோகுலரஞ்சன் (MPCS, தெல்லிப்பழை) ஆகியோரின் மாமியாரும் கஜலக்சிகா (U.K), அருணிகா (கனடா), அர்சயா (கனடா), அகிஷ்னன் (கனடா), தரணிசாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற நடராஜா மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவசுப்பிரமணியம், தவமணிதேவி, தனலக்சுமி, காலஞ்சென்ற லில்லிமலர் மற்றும் சிறிகௌரி, விஜயகாந்தன், தனபாலசிங்கம் (பத்திரிகை முகவர், இணுவில்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2011) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*61, பிறவுண் வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

**யாழ் நகரில்** *மிகக்குறைந்த கட்டணங்களில்*

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

Qualification: G.C.E.[O/L] Plus IELTS 5.5

After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½ Years Diploma & Degree
குறைந்தது 3 வருடத்தில் நீங்கள் ஒரு பட்டதாரி தகுதியான வேலையுடன்

IELTS (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We Gurantee Minimum 6.5 Band upwards

Diploma in English [2 Months] Advanced Diploma In English [2 Months]

100 % பயிற்சி
100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

SPONSOR/SETTLEMENT VISA - EXAMS
பிரித்தானியா அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட நிரந்தர வதிவிட விசாவை பெற்றுக் கொள்ளுவதற்கான ஆங்கிலப் பரீட்சை தொடர்பான ஆலோசனைகளும், அதற்கான பரீட்சைகளும் (A1, PTE, ESOL) எங்களால் வெற்றிகரமாக நடாத்தப்படுகிறது.
Duration : 2 Months
புதிய பிரிவு 03-03-2011

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913
0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 27-02-2011 காலை : 10.00 மணி
04-03-2011 மாலை : 03.00 மணி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.